SUPEEDSAM e-PAPER
www.Supeedsam.com

சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

தமிழின் குரலாய் அக்கினி Akkini fm

21 புதன்கிழமை அக்டோபர் 2026 | 21 Wednesday October 2026

Switzerland Edition

SUPEEDSAM e-PAPER
www.Supeedsam.com
சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

21 புதன்கிழமை அக்டோபர் 2026 | 21 Wednesday October 2026
Switzerland Edition

13வது AHV ஓய்வூதிய நிதி, பட்டாசுக்கட்டுப்பாடு உள்ளிட்ட நான்கு விடயங்களுக்கு நவம்பர் 29 இல் வாக்கெடுப்பு!

சுவிட்சர்லாந்தில் எதிர்வரும் 2026 நவம்பர் 29ஆம் திகதி, ஓய்வூதிய நிதியளிப்பு, பட்டாசுக் கட்டுப்பாடு, திருமணத் தம்பதிகளின் வரிவிதிப்பு மற்றும் ஆயுத ஏற்றுமதிச் சட்டத் திருத்தம் ஆகிய நான்கு விடயங்களில் மக்கள் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

இரு பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியவருக்கு 14 ஆண்டுகள் 6 மாதங்கள் சிறை: தண்டனையை அதிகரித்த சூரிச் மேல் நீதிமன்றம்!

இரு பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய வழக்கில், 30 வயதுடைய ஆணுக்கு 14 ஆண்டுகள் 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து சூரிச் மேல் நீதிமன்றம் திங்கட்கிழமை தீர்ப்பளித்துள்ளது. தண்டனைக் காலத்தின் பின்னர் அவர் 15 ஆண்டுகளுக்கு சுவிட்சர்லாந்திலிருந்து நாடுகடத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

சுவிசில் நவம்பர் 2 முதல் புதிய பயோமெட்ரிக் அடையாள அட்டை!

சுவிஸ் கடவுச்சீட்டைத் தொடர்ந்து, அடையாள அட்டையும் பயோமெட்ரிக் தொழில்நுட்பத்துடன் அறிமுகமாகிறது. 2026 நவம்பர் 2ஆம் திகதி முதல், சுவிஸ் பிரஜைகள் புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

சுவிஸ் கூட்டாட்சி அமைச்சரவைப் பதவி: போட்டியிடத் தயாராகும் Céline Amaudruz முக்கிய பிரமுகர்கள் மறுப்பு!

சுவிஸ் கூட்டாட்சி அமைச்சர் Guy Parmelin பதவிக்கு அடுத்தவரைத் தெரிவுசெய்வதற்கான வேட்பாளர் தேடல் SVP கட்சியில் தீவிரமடைந்துள்ளது. ஜெனீவா தேசிய சபை உறுப்பினரும் கட்சியின் துணைத் தலைவருமான Céline Amaudruz, இப்பதவிக்குப் போட்டியிடுவதாக அறிவித்துள்ள நிலையில், பல

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

சூரிச் நகர ஓய்வூதிய நிதிய உறுப்பினர்களின் தகவல்கள் திருடப்பட்டதற்கான அறிகுறிகள்; சேமிப்புகள் பாதுகாப்பு!

ஓய்வூதிய நிதியங்களுக்கான மென்பொருள் சேவைகளை வழங்கும் PK Softech AG நிறுவனம் மீதான இணையத் தாக்குதலில், சூரிச் நகர ஓய்வூதிய நிதியமான PKZH உறுப்பினர்களின் தனிப்பட்ட

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

13வது AHV ஓய்வூதிய நிதி, ட்டாசுக்கட்டுப்பாடு உள்ளிட்ட நான்கு விடயங்களுக்கு நவம்பர் 29 இல் வாக்கெடுப்பு!

13வது AHV ஓய்வூதியத்திற்கு VAT உயர்வு

சுமார் 26 இலட்சம் ஓய்வூதியதாரர்களுக்கு 13வது AHV ஓய்வூதியம் முதன்முறையாக டிசம்பர் 2026இல் வழங்கப்படவுள்ளது. இதற்கான செலவின் ஒரு பகுதியை ஈடுசெய்ய, பெறுமதிசேர் வரியை 0.4 சதவீதப் புள்ளிகளால் உயர்த்த நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளது. உணவு, மருந்துகள் போன்ற சில அத்தியாவசியப் பொருட்களுக்கான குறைக்கப்பட்ட வரி உயர்த்தப்படாது. இதன்மூலம் ஆண்டுக்கு சுமார் 140 கோடி பிராங்குகள் கிடைக்கும் என மதிப்பிடப்படுகிறது. மக்களின் ஒப்புதல் கிடைத்தாலும், உயர்வு 2028 ஆரம்பத்திலேயே மிக விரைவாக அமுலாக முடியும். இந்த வாக்கெடுப்பு 13வது ஓய்வூதியத்தை வழங்குவதற்கான அனுமதி பற்றியது அல்ல; அதன் நிதியளிப்பு பற்றியது.

சத்தமுள்ள பட்டாசுகளுக்குத் தடை கோரும் முன்முயற்சி

மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க, சத்தத்தை ஏற்படுத்தும் பட்டாசுகளின் விற்பனை மற்றும் பயன்பாட்டைத் தடை செய்ய முன்முயற்சி கோருகிறது. குறைந்த சத்தமுள்ள பட்டாசுகளை அனுமதிக்க வேண்டும் என்பது முன்முயற்சியாளர்களின் நிலைப்பாடாகும். முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களுக்கு மாநிலங்கள் விதிவிலக்கு அனுமதி வழங்க முடியும் என்றாலும், எந்தப் பட்டாசுகள் தடைக்குள் வரும் என்பது முன்முயற்சியில் துல்லியமாக வரையறுக்கப்படவில்லை.

திருமணத் தம்பதிகளின் வரிவிதிப்பு

திருமணத் தம்பதிகளுக்கு மத்திய வரிவிதிப்பில் ஏற்படும் பாகுபாட்டை நீக்கக் கோரும் «திருமணத் தம்பதிகளுக்கும் நியாயமான மத்திய வரிகள்» என்ற மக்கள் முன்முயற்சியும் வாக்கெடுப்புக்கு வருகிறது.

ஆயுத ஏற்றுமதி விதிகளைத் தளர்த்தும் சட்டத் திருத்தம்

குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ், ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ள கூட்டாளர் நாடுகளுக்கும் போர் உபகரணங்களை ஏற்றுமதி செய்ய வழிவகுக்கும் சட்டத் திருத்தம் வாக்கெடுப்புக்கு வருகிறது. அசாதாரண சூழ்நிலைகளில் ஏற்றுமதி அனுமதி நிபந்தனைகளிலிருந்து விலக அரசுக்கு அதிகாரமும் வழங்கப்படுகிறது. எனினும், நடுநிலைமைச் சட்டம், மனித உரிமைகள் மற்றும் சர்வதேசக் கடமைகள் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும். உள்நாட்டு பாதுகாப்புத் தொழில்துறைக்கு இது அவசியம் என அரசு கூறுகிறது; ஆயுதங்கள் தவறான கைகளுக்குச் செல்லும் அபாயம் அதிகரிக்கும் என எதிர்ப்பாளர்கள் எச்சரிக்கின்றனர்.

ஆதாரம்: சுவிஸ் அரசின் நவம்பர் 29 மக்கள் வாக்கெடுப்பு விளக்கங்கள்

முதலாவது சம்பவம் 2022 ஓகஸ்டில் Wetzikon பகுதியில் இடம்பெற்றது. திருவிழாவிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த 23 வயதுப் பெண் தாக்கப்பட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். இரண்டாவது சம்பவம் 2023ஆம் ஆண்டு Wädenswil காட்டுப்பகுதியில் இடம்பெற்றது. அப்போது 63 வயதுப் பெண் கத்தியைக் காட்டி மிரட்டப்பட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். இருவரும் தாக்குதல்களில் காயமடைந்துள்ளனர்.

குற்றங்களை நீதிமன்றத்தில் மீண்டும் ஒப்புக்கொண்ட அவர், வருத்தம் தெரிவித்ததுடன், மீண்டும் குற்றமிழைப்பதைத் தவிர்ப்பதற்காகச் சிகிச்சை பெற விரும்புவதாகக் கூறியுள்ளார்.

முன்னதாக, 2025 ஏப்ரலில் Hinwil மாவட்ட நீதிமன்றம் அவருக்கு 13 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 15 ஆண்டுகள் நாடுகடத்தல் உத்தரவும் வழங்கியிருந்தது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசுத் தரப்பு மேல்முறையீடு செய்த நிலையில், சிறைத்தண்டனை தற்போது ஒன்றரை ஆண்டுகளால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசுத் தரப்பு 18 ஆண்டுகள் சிறைத்தண்டனையுடன், தண்டனைக் காலத்திற்குப் பின்னரும் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தொடர்ந்து தடுப்பில் வைக்கும் «Verwahrung» நடவடிக்கையையும் கோரியிருந்தது. எனினும், மேல் நீதிமன்றம் அந்தத் தடுப்புக் கோரிக்கையை ஏற்கவில்லை.

புதிய அடையாள அட்டையில் பொருத்தப்படும் மின்னணுச் சிப்பில், அட்டைதாரரின் முகப்படமும் இரண்டு விரல் ரேகைகளும் சேமிக்கப்படும். இதற்கான கட்டணம், தற்போது பயன்பாட்டிலுள்ள சிப் இல்லாத அடையாள அட்டையின் கட்டணத்திலேயே தொடரும்.

சிப் இல்லாத பழைய வகை அடையாள அட்டைக்கான விண்ணப்பத்தை உள்ளூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாமா அல்லது மாநில அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டுமா என்பதை அந்தந்த மாநிலங்களே தீர்மானிக்கும்.

இந்த பயோமெட்ரிக் அடையாள அட்டையும் E-ID எனப்படும் மின்னணு அடையாளமும் வெவ்வேறானவை. பயோமெட்ரிக் அட்டை நேரடியாக வழங்கப்படும் அடையாள மற்றும் பயண ஆவணமாகும். E-ID இணையச் சேவைகளில் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான மின்னணு வசதியாகும்; அதனைப் பயண ஆவணமாகப் பயன்படுத்த முடியாது.

இதேவேளை, நவம்பர் 2 முதல் தற்போது «தற்காலிகக் கடவுச்சீட்டு» என அழைக்கப்படும் «Provisorischer Pass», இனிமேல் «Notpass» – அவசரக் கடவுச்சீட்டு எனப் பெயர் மாற்றம் பெறுகிறது. அதன் வடிவமைப்பும் பாதுகாப்பு அம்சங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. எனினும், அதனைப் பெறுவதற்கான நிபந்தனைகளிலும் விண்ணப்ப நடைமுறையிலும் மாற்றம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் கூட்டாட்சி அமைச்சரவைப் பதவி: போட்டியிடத் தயாராகும் Céline Amaudruz முக்கிய பிரமுகர்கள் மறுப்பு!

முக்கிய பிரமுகர்கள் போட்டியிடப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

தனியார் வங்கியொன்றில் சொத்து முகாமையாளராகப் பணியாற்றும் Amaudruz, 15 ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார். பிரெஞ்சு மொழி பேசும் சுவிஸ் பிராந்தியத்திலிருந்து முன்னிலைப்படுத்தப்படும் முக்கிய வேட்பாளராக அவர் கருதப்படுவதாக Watson தெரிவிக்கிறது.

இதனிடையே, சுவீட்ஸ் மாநில அமைச்சர் André Rüegsegger, தனது மாநில SVP கட்சியால் பரிந்துரைக்கப்பட்டிருந்தபோதிலும், போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார். சூரிச் மாநில அமைச்சர் Natalie Rickliயும் தனது மாநில அரசுப் பணியைத் தொடர விரும்பு வதாகக் கூறி, கூட்டாட்சி அமைச்சரவைக்கான போட்டியை நிராகரித்துள்ளார். அவர் 2027ஆம் ஆண்டு சூரிச் மாநில அரசுத் தேர்தலில் மீண்டும் போட்டியிடத் திட்டமிட்டுள்ளார்.

செங்காளன் மாநிலங்களவை உறுப்பினர் Esther Friedli, தனது தற்போதைய பொறுப்பில் கவனம் செலுத்த விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். தேசிய சபை உறுப்பினரும் தொழிலதிபருமான Magdalena Martullo-Blocherவும் இப்பதவியில் ஆர்வமில்லை எனக் கூறியுள்ளார். SVP தேசியத் தலைவர் Marcel Dettling, கட்சியை வழிநடத்துவதே தனது பணி எனத் தெரிவித்து, போட்டியிடுவதை நிராகரித்துள்ளார்.

வேட்புமனுக்களைப் பதிவு செய்வதற்கான காலக்கெடு ஒக்டோபர் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைகிறது. அதுவரை மேலும் யார் போட்டியிட முன்வருவார்கள் என்பது சுவிஸ் அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது

சூரிச் நகர ஓய்வூதிய நிதிய உறுப்பினர்களின் தகவல்கள் திருடப்பட்டதற்கான அறிகுறிகள்; சேமிப்புகள் பாதுகாப்பு!

தகவல்களும் திருடப்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 15ஆம் திகதி நிலவரப்படி வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பில், திட்டமிடப்பட்ட கணினி முறைமை மாற்றத்திற்கான சோதனைகளில் பயன்படுத்தப்பட்ட தகவல்கள் இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. PK Softech நிறுவனத்தின் நிர்வாக முறைமைக்கு 2027ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மாறுவதற்கு PKZH திட்டமிட்டிருந்தது.

தற்போது PKZH வேறொரு மென்பொருள் வழங்குநரின் முறைமையைப் பயன்படுத்துவதால், அதன் நடப்பு நிர்வாகக் கணினி முறைமை தாக்குதலால் பாதிக்கப்படவில்லை. உறுப்பினர்களின் ஓய்வூதியச் சேமிப்புகளும் ஓய்வூதியங்களும் பாதுகாப்பாக உள்ளன என நிதியம் உறுதியளித்துள்ளது.

எந்தெந்தத் தனிப்பட்ட தகவல்கள் உண்மையில் திருடப்பட்டுள்ளன என்பதைக் கண்டறியும் ஆய்வு தொடர்கிறது. பெயர், பிறந்த திகதி, AHV இலக்கம், முகவரி, தனிப்பட்ட மற்றும் அலுவலக மின்னஞ்சல் முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், IBAN வங்கிக் கணக்கு இலக்கம் உள்ளிட்டவை பாதிக்கப்பட்டிருக்கக்கூடும். காப்புறுதிக்கு உட்பட்ட வருமானம், ஓய்வூதியச் சேமிப்பு, திருமண நிலை மற்றும் வாழ்க்கைத்துணை தொடர்பான விபரங்களும் இதில் அடங்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களைப் பயன்படுத்தி மோசடிக்காரர்கள் நம்பகமானவைபோல் தோன்றும் போலி மின்னஞ்சல்களை அனுப்பவோ தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளவோ முடியும் என PKZH எச்சரித்துள்ளது. எதிர்பாராத மின்னஞ்சல்களில் வரும் இணைப்புகள் அல்லது இணைப்புக் கோப்புகளைத் திறக்க வேண்டாம் என்றும், உள்நுழைவு விபரங்களை மின்னஞ்சல், தொலைபேசி அல்லது அரட்டை வழியாகப் பகிர வேண்டாம் என்றும் உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக குற்றவியல் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், உறுப்பினர்களின் நலனுக்காக மேலதிகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து ஆராயப்படுவதாகவும் PKZH தெரிவித்துள்ளது. சந்தேகங்கள் உள்ளவர்கள் info@pkzh.ch என்ற அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் முகவரியைத் தொடர்புகொள்ளலாம்.

AERO COURIER
உங்கள் உறவுகள்...
எங்களால் இணைகிறது...
ஒரு கிலோவிற்கு
7.00 CHF
மட்டுமே!
சுவிட்சர்லாந்திலிருந்து இலங்கைக்கு விமானம் ஊடாக குறைந்த விலையில் உங்கள் பொதிகளை 10 நாட்களுக்குள் உங்கள் உறவினர்களின் கைக்களில் கிடைக்கப்பேற இன்றே நாடுங்கள்!
SATISFACTION 100% GUARANTEE
AERO COURIER
Neugasse 60, 8005 Zürich
079 591 16 66 | 076 384 15 80
www.aerocourier.com

ELLAALAN
SWITZERLAND
இறக்குமதியாளர், விநியோகஸ்தர்,
மொத்தவிற்பனையாளர்
Zürich சில்லறை விற்பனை நிலையம்
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.
Moteren Strasse 9
8005 Zürich
044 543 48 84
மொத்த விற்பனை
Felsweg 1
5727 Oberkulm AG, Switzerland
+41 41 870 88 44
+41 79 888 88 44
info@ellaalan.ch
www.ellaalan.ch

சுவிசில் 2027 சம்பள மூலவரி கணக்கீட்டில் மாற்றம்

ஜனவரி 1 முதல் அமுல்

சுவிட்சர்லாந்தில் 2027ஆம் ஆண்டுக்கான சம்பள மூலவரி (Quellensteuer) கணக்கீடு தொடர்பான புதிய வழிகாட்டியை மத்திய வரி நிர்வாகம் வெளியிட்டுள்ளது. பணவீக்கத்தின் தாக்கத்தைச் சரிசெய்யும் வகையில் வரி அட்டவணைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, குழந்தை ஒன்றுக்கான வருடாந்த வரித்தொகைக் கழிவு 263 பிராங்கிலிருந்து 264 பிராங்காக அதிகரிக்கிறது. இது செலுத்த வேண்டிய வரித்தொகையில் வழங்கப்படும் கழிவே தவிர, மாதாந்தக் குழந்தைக் கொடுப்பனவு அல்ல.

2027 ஜனவரி 1 முதல் பொருந்தும் இந்த மாற்றம், சம்பளத்தில் மூலவரி பிடிக்கப்படும் ஊழியர்கள் மற்றும் சம்பளக் கணக்கீடு செய்யும் நிறுவனங்களுக்குத் தொடர்புடையது.

Zürich உள்ளிட்ட ஒவ்வொரு கன்டோனுக்கும் பொருந்தும் இறுதி மூலவரி அட்டவணைகளின் அடிப்படையிலேயே சம்பள வரிப்பிடித்தம் கணக்கிடப்பட வேண்டும். எனவே, அனைவருக்கும் ஒரே அளவில் வரி குறையும் எனக் கருதக்கூடாது.

நிறுவனங்கள் தங்களது சம்பளக் கணக்கீட்டு அமைப்புகளைப் புதுப்பிக்க வேண்டும். ஊழியர்கள் தமது குடும்பநிலை மற்றும் குழந்தைகள் தொடர்பான விவரங்கள் சரியாகப் பதிவாகியுள்ளதா என்பதை உறுதிசெய்வது அவசியமாகும்.

இந்த மாற்றம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது; தற்போது நடைமுறையில் இல்லை.

ஆதாரம்: மத்திய வரி நிர்வாகத்தின் சுற்றறிக்கை இலக்கம் 221 – 20.10.2026

Importas Cash & Carry

உலகின் சுவை உங்களுக்கு அருகில்!

ZÜRICH RETAIL SHOP

Importas Cash & Carry
Only 80 m from Letzipark
Baslerstrasse 102
8048 Zürich

Tel: +41 43 343 03 55
Fax: +41 43 343 03 56
Email: info@importas.ch

OPENING HOURS
Mon–Fri 10:00–20:00
Sat 09:00–18:00

BERN RETAIL SHOP

Importas Cash & Carry
Kranichweg 8
3074 Muri bei Bern

Tel: +41 31 951 24 44
Email: bern@importas.ch

OPENING HOURS
Mon–Fri 09:00–19:00
Sat 08:00–18:00

www.importas.ch

MULLTI CONSULTING
Versicherung & Finanz
IHR PARTNER FÜR
IMMOBILIEN
VERSICHERUNG
FINANZ
SICHER. PERSÖNLICH. FÜR IHRE ZUKUNFT.
வீடு வாங்க விற்க
வங்கிக்கடன்
காப்புறுதிகள்
வருமான வரிப்படிவம் நிரப்புதல்
சமூக அக்கறை
எமது இலக்கு!
உங்கள் வீட்டையும்,
உங்கள் குடும்பத்தையும்,
உங்கள் எதிர்காலத்தையும் பாதுகாப்போம்.
079 765 50 57
Jetzt kontaktieren
Im Rietpark 5
8180 Bülach ZH
srasan@hotmail.com
info@multiconsulting.ch
Besuchen Sie unsere Website.
www.multiconsulting.ch

SKY AUTO AG
சுவிற்சர்லாந்தில் உங்களுக்கு பிடித்த வாகனம் எந்த Brandல் எங்கிருந்தாலும் உடனே ஒழுங்கு செய்து உங்கள் கைகளுக்கே கொண்டுவந்து தரும் முதல் தமிழர் நிறுவனம்
Express Credit அல்லது Leasing சேவை
குறைந்த வட்டி வீதம் மற்றும் காப்புறுதியோடு உங்கள் வாகனம் உங்கள் கைகளில்
தொடர்புக்கு 031 930 70 80
Libellenweg 21
3006 Bern
www.sky-auto.ch

சூரிச் ஏரிக்கரையில்

ரோஜர் ஃபெடரரின் புதிய இல்லம்!

சுவிட்சர்லாந்தின் டென்னிஸ் நட்சத்திரம் ரோஜர் ஃபெடரர், தனது குடும்பத்துடன் சூரிச் ஏரிக்கரையில் அமைந்துள்ள புதிய இல்லத்தில் குடியேறியுள்ளதாக Nau.ch செய்தி வெளியிட்டுள்ளது.

செங்காளன் மாநிலத்தின் Rapperswil-Jona பகுதியில் அமைந்துள்ள இந்தச் சொத்து, சுமார் 16,000 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

புதிய இல்லத்தின் சிறப்பம்சங்கள்:

• ஆறு கட்டடங்கள் மற்றும் நிலத்தடிக் கார் நிறுத்துமிடம்.

• ஃபெடரரின் «RF» இலச்சினையுடன் தனி டென்னிஸ் மைதானம்.

• பெரிய வெளிப்புற நீச்சல் குளம்.

• பூங்கா போன்ற விசாலமான பசுமைச் சூழல்.

• சூரிச் ஏரியை நேரடியாக ஒட்டிய அமைவிடம்.

இந்தச் சொத்தின் செலவு சுமார் 70 மில்லியன் பிராங்குகள் – 7 கோடி பிராங்குகள் என மதிப்பிடப்படுகிறது. எனினும், இத்தொகை உறுதிப்ப டுத்தப்படவில்லை. திட்டத்தின் முழு விவரங்கள் இல்லாமல் இதனை மதிப்பிட முடியாது என ஆடம்பரச் சொத்துத் துறை தொடர்பாளர் Anisa Imhof தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக நீடித்த கட்டுமானம்

2019ஆம் ஆண்டு கோடையில் ஃபெடரர் இந்த நிலத்தை வாங்கியிருந்தார். ஆரம்பத்தில் 2021ஆம் ஆண்டு இறுதியில் குடியேறத் திட்டமிடப்பட்டிருந்தாலும், பழைய கட்டுமானக் கழிவுகள் கலந்த மண்ணை அகற்றுதல் உள்ளிட்ட பிரச்சினைகளால் பணிகள் தாமதமாகின.

ஏரிக்கரைச் சுவர் தொடர்பான விவகாரத்தால் 2021இல் தற்காலிகமாகப் பணிகள் நிறுத்தப்பட்டன. திட்டமிடப்பட்ட படகு இல்லத்துக்கும் 2024இல் மத்திய அரசு தடை விதித்ததைத் தொடர்ந்து, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

அயலவர்களின் வரவேற்பும்
ஏரிக்கரைப் பாதை கோரிக்கையும்

பிரபல டென்னிஸ் வீரரை அப்பகுதியில் சந்திப்பது மகிழ்ச்சியளிக்கும் என சில அயலவர்கள் தெரிவித்துள்ளனர். அதேவேளை, அவரது நிலத்தை ஒட்டிய ஏரிக்கரையில் பொதுமக்கள் நடந்து செல்லும் பாதை இல்லாதது குறித்த விமர்சனமும் தொடர்கிறது

Sj
சிறி ஜீவல்லரி
உங்கள் ரசனைக்கேற்ப புதிய தங்க நகைகளை வாங்கவும் புதிய டிசைன்களில் ஆபரணங்களை செய்து கொள்ளவும், பழைய தங்கங்களை உருக்கி, புதிய தங்க நகைகள் செய்து கொள்ளவும், விரைவாக திருத்த வேலைகளும் செய்தும் தரப்படும்.
நகைத்தொழிலில் நீண்ட காலம் அனுபவம் பெற்ற நாங்கள் தாலிக்கு பொன் உருக்கி வைரதாலிக்கொடி செய்து தருகிறோம்.
வைர தாலி கொடி. மோதிரம், வளையல், பெயர் பெண்டன் மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
Sj SRI JEWELLERY
Mattengasse 17, 8005 Zurich
043 366 80 09
info@srijewellery.ch
079 898 51 01

Aathi
RESIDENCIES
Alles Garden, Trincomalee
LUXURY APARTMENTS FOR SALE
Experience a new lifestyle at Alles Garden, Trincomalee's premium residences.
Pay just 30% now
Balance payable monthly with 0% interest
Book Your Site Visit Today
Mr. Srikaran
+41 79 136 4465
+94 77 710 0050

Food is our trade
World is our Market
Sai Trader since 1991 GmbH
Importeur für frishe, exotische Gemuse | Fruchte & Fische
Aufeldstrasse 9 • 5417 Turgi
Tel. 044 885 86 50 • Fax 044 885 86 61
www.saitrader.ch • info@saitrader.ch
உணவுப்பொருட்களின் இறக்குமதியாளரும், மொத்த விற்பனையாளரும்.

rib
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
உங்கள் கணக்குகள் – எங்கள் பொறுப்பு!
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நம்பகமான மற்றும் தொழில்முறை கணக்கியல் சேவைகள்.
கணக்குப் பதிவு – Buchhaltung
வருடாந்த கணக்கு முடிப்பு – Jahresabschluss
MWST / VAT கணக்கீடு
சம்பள கணக்கீடு – Lohnbuchhaltung
Quellensteuer
நிறுவன ஆரம்பம் மற்றும் நிர்வாக ஆலோசனை
வணிகம் மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகள்
துல்லியம் • நம்பிக்கை • தனிப்பட்ட சேவை
உங்கள் வியாபார வெற்றிப் பயணத்தில் நம்பிக்கையான துணையாக...
ROMANDA IMMO BUCHHALTUNG GMBH
Tovilistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch

STRAVEL
Your Journey Our Care
Year End Sale
இலங்கைக்கு..
620 CHF
40 Kilo
Sri Lanka
Always a good idea
Home is closer than you think
Travel Brings Us Closer
அழையுங்கள்
044 419 91 00
079 913 77 59
Luisenstrasse 41, 8005 Zurich
www.stravel.ch
info@stravel.ch

பிள்ளைகளின் எதிர்காலம்:

தொழிற்பயிற்சியா, பல்கலைக்கழகமா?

"பிள்ளை பல்கலைக்கழகம் சென்றால்தான் நல்ல எதிர்காலம் அமையும்" என்ற எதிர்பார்ப்பு நமது தமிழ்ச் சமூகத்தின் சில குடும்பங்களில் உள்ளது. பிள்ளைகள் உயர வேண்டும் என்ற பெற்றோரின் அக்கறை புரிந்துகொள்ளக்கூடியது. ஆனால் சுவிட்சர்லாந்தில் எதிர்காலத்தை அமைத்துக்கொள்ளத் தொழிற்பயிற்சியும் ஒரு முக்கியமான பாதையாகும்.

தொழிற்பயிற்சியைத் தேர்ந்தெடுப்பது குறைவான சாதனையல்ல. அதேபோன்று, பல்கலைக்கழகக் கல்வியைத் தேர்ந்தெடுப்பதும் அதிக சம்பளத்திற்கான உறுதிப்பத்திரமல்ல. பிள்ளையின் ஆர்வம், திறமை, கற்றுக்கொள்ளும் முறை மற்றும் தொழில் இலக்கு ஆகியவற்றுக்கு ஏற்ற பாதையே முக்கியம்.

தொழிற்பயிற்சி மேற்கொள்பவர்கள் இளம் வயதிலேயே பணிச்சூழலை அறிந்துகொண்டு, சம்பாதிக்கவும் ஆரம்பிக்கின்றனர். நடைமுறை அனுபவத்துடன் பணத்தைப் பொறுப்பாகக் கையாளும் பழக்கத்தையும் வளர்த்துக்கொள்ள முடியும். பல்கலைக்கழகத்தில் படிப்பவர்கள் கல்விக்காக அதிக காலத்தைச் செலவிடுகின்றனர். அவர்கள் தேர்ந்தெடுக்கும் துறையைப் பொறுத்து, பின்னர் அதிக வருமானம் பெறும் வாய்ப்பு இருக்கலாம்.

இதனை விளக்கும் வகையில் Selma Finance நிறுவனம் இரண்டு கற்பனைச் சகோதரிகளை ஒப்பிட்டுள்ளது. தொழிற்பயிற்சி மேற்கொண்டவர் முன்னதாகவே முதலீட்டைத் தொடங்குகிறார். பல்கலைக்கழகத்தில் படித்தவர் பின்னர் அதிக சம்பளத்தில் வேலைக்குச் சேர்கிறார். அந்த உதாரணக் கணக்கீட்டில், முன்னதாக முதலீட்டைத் தொடங்கியவர் பல ஆண்டுகள் முன்னிலையில் இருக்கிறார்.

இதற்குக் காரணம், முதலீட்டில் கிடைக்கும் வருமானமும் தொடர்ந்து வருமானம் ஈட்டும் கூட்டு வளர்ச்சி ஆகும். இருப்பினும், கணக்கீட்டில் பயன்படுத்தப்பட்ட ஆண்டுக்கு ஐந்து சதவீத வருமானம் உறுதியானதல்ல. இந்த உதாரணத்தை வைத்து எல்லோருக்கும் ஒரே முடிவு கிடைக்கும் என்று கூற முடியாது.

குடும்பப் பொறுப்புகள், வாடகை, வரி, காப்புறுதி மற்றும் அன்றாடச் செலவுகள் ஒவ்வொருவருக்கும் வேறுபடும். அதிக சம்பளம் பெறுபவராலும் சேமிக்க முடியாமல் போகலாம்; குறைவாகச் சம்பாதிப்பவராலும் திட்டமிட்டுச் சேமிக்க முடியும். அதேவேளை, குறைந்த வருமானத்தில் சேமிப்பது கடினமாக இருக்கலாம் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

பெற்றோராக நாம் கேட்க வேண்டியது, "மற்றவர்களின் பிள்ளை என்ன படிக்கிறது?" என்பதைக் காட்டிலும், "எமது பிள்ளைக்கு எதில் ஆர்வம் இருக்கிறது? எந்தத் துறையில் திறமையை வளர்த்துக்கொள்ள முடியும்?" என்பதாக இருக்கட்டும். பிள்ளைகளின் கருத்தைக் கேட்டு, ஆசிரியர்கள் மற்றும் தொழில் வழிகாட்டிகளின் உதவியுடன் முடிவெடுப்பது பயனுள்ளதாக இருக்கும்.

கல்வியைச் சம்பளத்தால் மட்டும் அளவிட முடியாது. விருப்பமான வேலை, உடல்நலம், மனநிறைவு, தொடர்ந்து கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஆகியவையும் நல்ல வாழ்க்கையின் பகுதிகளே. தொழிற்பயிற்சியாக இருந்தாலும் பல்கலைக்கழகமாக இருந்தாலும், பிள்ளைகள் தமக்கு ஏற்ற பாதையில் நம்பிக்கையுடன் முன்னேறக் குடும்பத்தின் ஆதரவு அவசியம்.

SPITEX
UNICARE AG
உறவினரைப்
பராமரிப்பவராக
(பராமரிப்பு உதவியாளராக)
பணியில் சேருங்கள்
உங்கள் அன்பானவர்களை
பராமரித்து, அதற்கான
நியாயமான ஊதியம் பெறுங்கள்!
மணிக்கு
CHF 38.-
ஊதியம்
நாங்கள் செயல்படும்
11 மாகாணங்கள்:
Aargau
Zürich
Schaffhausen
St. Gallen
Uri
Basel-Landschaft
Obwalden
Bern
Nidwalden
Luzern
Schwyz
உங்கள் வீட்டிலேயே பராமரிப்பு
நியாயமான ஊதியம்
தனிப்பட்ட ஆதரவு
இப்போது தொடர்புகொள்ளுங்கள்
076 581 44 45
மேலும் தகவல்களுக்கு
spitexunicare.ch
MENSCHLICH • ZUVERLÄSSIG • IN IHRER REGION

புதிய சாலைகள் அமைக்கும் முன்
நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துங்கள்!

சுவிட்சர்லாந்தில் புதிய சாலைகள் மற்றும் ரயில் பாதைகளை அமைப்பதற்கு முன்னர், ஏற்கெனவே உள்ள போக்குவரத்து வலையமைப்பை நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் சிறப்பாகப் பயன்படுத்த முடியுமா என்பதை ஆராய வேண்டும் என Swiss Engineering பொறியாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

«Verkehr ’45» திட்டம் என்ன?

2045ஆம் ஆண்டுவரை முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய சாலை, ரயில் மற்றும் நகர்ப்புறப் போக்குவரத்துத் திட்டங்களை ஒருங்கிணைத்துத் திட்டமிட மத்திய அரசு முனைகிறது. இந்த அணுகுமுறையை வரவேற்கும் சங்கம், தொழில்நுட்ப மற்றும் நிர்வாகத் தீர்வுகளுக்கும் கூடுதல் முக்கியத்துவம் வழங்க வேண்டும் எனக் கோருகிறது.

தானியங்கி வாகனங்கள் எதிர்காலத்தில் போக்குவரத்தைச் சீராக்க உதவக்கூடும் எனச் சங்கம் கருதுகிறது. மேலும், பயணிக்கும் நேரம் மற்றும் தூரத்துக்கு ஏற்ப மாறுபடும் கட்டணம் வசூலிக்கும் Mobility Pricing முறையும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த உதவலாம் எனக் குறிப்பிடுகிறது.

இரண்டு நெடுஞ்சாலை விரிவாக்கங்களுக்கு ஆதரவு

வழங்கப்பட்ட செய்தியின்படி, A1 நெடுஞ்சாலையின் Aarau-Ost-Birrfeld மற்றும் Perly-Bernex பகுதிகளை ஆறு வழித்தடங்களாக விரிவுபடுத்தும் திட்டங்களைச் சங்கம் ஆதரிக்கிறது.

அதேவேளை, திட்டமிடப்பட்ட Grimsel சுரங்கத்தின் முன்னுரிமையை மீளாய்வு செய்ய வேண்டும் என்றும், அதன் மதிப்பிடப்பட்ட 800 மில்லியன் பிராங்குகள் செலவு மிக நம்பிக்கையான கணிப்பாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

புதிய ரயில் திட்டங்களுக்கான நிதியை மதிப்பிடும்போது, தற்போதுள்ள ரயில் வலையமைப்பின் பராமரிப்புச் செலவுகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டும் என்பதும் சங்கத்தின் கோரிக்கையாகும்.

TAMINAA
AYURVEDIC WELLNESS
Natürliche Schmerzlinderung ohne Medikamente gegen Stress,
Rückenschmerzen, Nackenschmerzen,
Schlafprobleme
DISCOUNT 25% OFF
BEST PRICE TREATMENT
Krankenkasse anerkannt!
Rückenschmerzen/ Nackenschmerzen
Stress
Migräne/ Kopfschmerzen
Entspannung
Migränelindernde
Stressabbau
Nacken/Rückenschmerzen
Schlafqualität
Buchen Sie jetzt und erhalten Sie 25 % Rabatt für November!
Nur für Sie!
Buchen Sie noch heute Ihren Termin!
+41 79 940 15 10
taminaa.ch
Hegibachstrasse 34B
8032 Zürich
Schweiz
Krankenkasse anerkannt!
WIR KOMMEN AUCH ZU IHNEN NACH HAUSE, INS BÜRO ODER INS HOTEL
ZUHAUSE Hausbesuch
BÜRO Firmenbesuch
HOTEL Hotelbesuch
+41 79 940 15 10
taminaa.ch
Hegibachstrasse 34B
8032 Zürich
Schweiz
TAMINAA – Ihre Gesundheit in besten Händen

சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
பத்திரிகை
வாரத்தில் ஒருமுறை
உங்கள் கரங்களில்
மின்னிதழாக...
வேதாந்தி : 004178 6264375
supeedsam@gmail.com
சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில்
இணைய இங்கே தொடவும்....
CLICK HERE

அதிவேக வாகனங்களைக் கண்டறிய ட்ரோன்கள்: செங்காளன் பொலிஸாரின் புதிய கண்காணிப்பு!

சுவிட்சர்லாந்தின் செங்காளன் மாநிலப் பொலிஸார், சாலைப் போக்குவரத்தில் அதிவேகம் உள்ளிட்ட விதிமீறல்களைக் கண்டறிய இந்த ஆண்டு முதல் ட்ரோன்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

Toggenburg மற்றும் சூரிச் மாநிலத்தின் Tösstal பகுதிகளை இணைக்கும் Hulftegg மலைப்பாதையில், வேகக் கண்காணிப்புக்கான புதிய ட்ரோன்களை வெள்ளிக்கிழமை பொலிஸார் அறிமுகப்படுத்தினர்.

வேகம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

வானிலிருந்து பதிவு செய்யப்படும் காணொளிகளில், ஒரு வாகனம் குறிப்பிட்ட தூரத்தைக் கடக்க எடுத்துக்கொள்ளும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு அதன் வேகம் கணக்கிடப்படுகிறது.

அதிவேக ஓட்டம் தொடர்பான தகவல்கள் கிடைக்கும் சாலைப் பகுதிகளில் இந்தக் கண்காணிப்பு முன்னுரிமையாக மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஆண்டின் சோதனை முடிவுகள்:

- Stossstrasse: ஐந்து ட்ரோன் சோதனைகளில் இரண்டு வேக வரம்பு மீறல்கள் கண்டறியப்பட்டன.
- Hulftegg அருகிலுள்ள Mühlrüti: ஒரு சோதனை மேற்கொள்ளப்பட்டது; விதிமீறல் எதுவும் பதிவாகவில்லை.

சாலைப் பாதுகாப்பை அதிகரிப்பதும் போக்குவரத்து விதிமீறல்களைக் கட்டுப்படுத்துவதுமே இந்த நடவடிக்கையின் நோக்கம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தகவல் கணனி
தொழில்நுட்ப நிலையம்
உங்கள் எதிர்காலத்திற்கு ஒரு புதிய துவக்கம்!
புதிய கணனி வகுப்புகள் ஆரம்பம்
எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு விசேட சலுகைகள், ஊக்குவிப்புகள் எம்மால் வழங்கப்படுகின்றன.
அறிவு உங்கள் வெற்றியின் அடித்தளம்!
கணனி வகுப்புகள்
ECDL • SIZ • Windows 11
Word • Excel • PowerPoint • Access
Learn
Create
Grow
NEW CLASS - ECDL
சனி 09:30 – 11:00
ஞாயிறு 09:30 – 11:00
NEW CLASS - A+
புதன் 18:00 – 20:00
Schnuppern • Zukunftstag • Lehrstellen • Praktikum
இன்றே பதிவு செய்யுங்கள்!
Seebahnstrasse 231, 8004 Zürich
Mano
043 811 80 90

LAMELLE GLASS & STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
சுவிஸின் ஒரே தமிழ்
கண்ணாடித் தொழிற்சாலை!
சுவிட்சர்லாந்து முழுவதும் சேவை
எந்த இடத்திலும், எந்த நேரத்திலும்!
உங்கள் வீட்டின் அழகையும்
பாதுகாப்பையும் அதிகரிக்க,
உயர்தர கண்ணாடிகளை நாமே
தயாரித்து நேரடியாகப்
பொருத்தித் தருகிறோம்.
BEST PRICE
எமது சேவைகள்:
• ஜன்னல் மற்றும் கதவு கண்ணாடிகள்
• குளியலறை கண்ணாடித் தடுப்புகள் (SHOWER GLASS)
• பால்கனி மற்றும் பாதுகாப்பு வேலி கண்ணாடிகள்
• சமையலறை அலங்காரக் கண்ணாடிகள்
சிறப்பம்சங்கள்:
• இலவச மதிப்பீடு (GRATIS OFFERTE) — உங்கள் இடத்திற்கே வந்து அளவீடு செய்வோம்.
• சொந்தத் தயாரிப்பு — மிகக் குறைந்த விலை, சிறந்த தரம்.
• நாடெங்கும் சேவை — ஜெனிவா உட்பட சுவிஸின் அனைத்துப் பகுதிகளுக்கும்.
உங்கள் தேவைகளை தமிழில் பேசி, தரமாகப் பெற்றிடுங்கள்!
VERNIER
48, Chemin Delay, 1214 Vernier
info@lamelle-glass.ch
GENÈVE
27, Rue du Grand-pré, 1202 Genève
info@lamelle-glass.ch
NYON
8, Rue de la Colombière, 1260 Nyon
nyon@lamelle-glass.ch
இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்:
PRABA +41 79 416 76 96 www.lamelle-glass.ch

7/24 DEPANNAGE URGENCE
022 782 08 88
LAMELLE GLASS & STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
info@lamelle-glass.ch
www.lamelle-glass.ch - 48, Chemin Delay - 1214 Vernier

NOLIMIT ONE
GmbH
ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.
REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.
ALLES AUS EINER HAND –
FÜR PRIVAT UND GEWERBE.
REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.
TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.
UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.
ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll
ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende
FLEXIBEL
Kurzfristig einsatzbereit
FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen
WARUM NOLIMIT ONE?
Professionelle Arbeit & höchste Qualität
Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
Privatkunden, Firmen & Verwaltungen
Individuelle Lösungen für Ihren Bedarf
Termingerecht & zuverlässig
CRAFTER
MASTER
JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.
078 222 2126
nolimitone26@gmail.com
Ostschweiz
Unterwegs für Sie in der Region
Jeder Auftrag
wird mit Sorgfalt und Respekt ausgeführt
Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft
No Limit One – wir machen den Unterschied.
www.nolimitone.ch

தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE

Siva Ship Cargo
மாதாந்த கப்பல் பொதிச் சேவை
Swiss to Sri Lanka
எமது அடுத்த கப்பல சேவை
26.10.2026
காலங்கள் பல கரைந்தோடினாலும்
தாய் மண்ணின் உறவுகளை மறவாத எம் தேசத்து உறவுகளே!
உங்கள் உணாவின் அர்ப்பணிப்புத்தான் நொந்துநிற்கும்
எம் தாயக உறவுகளின் வாழ்வாதாரம்.
உங்கள் பாவனைகளின் பின்பு வீடுகளில் உறங்கிக்கடக்கும் சகல பொருட்களையும் எம் தேசத்தின் பாச உறவுகளை நினைத்து எம்மிடம் ஒப்படையுங்கள். உங்கள் பாசம் கலந்த பொருட்களை எம் தேசத்தின் உங்கள் உறவுகளின் வீட்டு வாசல் வரை தேடிச் சென்று பாதுகாப்பாக அவர்கள் கைகளில் ஒப்படைப்போம்.
உங்கள் உயர்வான நம்பிக்கையோடு சுவிஸ்சில் 17 வருடங்களாக கப்பல் பொதிச் சேவையை நடாத்திவரும் தமிழர் நிறுவனமான Siva Ship Cargo வை நீங்களும் நாடுங்கள்.
அனுப்பக்கூடிய பொருட்கள்
உணவுப் பொருட்கள்
உடுப்புக்கள்
தளபாடங்கள்
கட்டில் மெத்தை
ரிவி
பிரிச்
சைக்கிள்
போன்ற சகல பொருட்களும்
யாழ்ப்பாணம்
கொழும்பு
079 605 85 48 / 076 779 50 04

இளைஞர்களின் பாலியல் ஆரோக்கியத்திற்காக புதிய LOVE LIFE விழிப்புணர்வுப் பிரசாரம்!

சுவிட்சர்லாந்தின் மத்திய சுகாதார அலுவலகம் BAG, 16 முதல் 26 வயதுடையவர்களுக்கான புதிய «LOVE LIFE» விழிப்புணர்வுப் பிரசாரத்தை வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளது. பேர்னில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் இது அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரசாரத்தின் நோக்கம் என்ன?

இளைஞர்களுக்குப் பாதுகாப்பான பாலுறவு மற்றும் பாலியல் ஆரோக்கியம் தொடர்பான தெளிவான தகவல்களை வழங்குவதே இதன் நோக்கமாகும். காணொளி உரையாடல்கள் மற்றும் குறுங்காணொளிகள் ஊடாக விழிப்புணர்வுத் தகவல்கள் பகிரப்படவுள்ளன.

இந்தப் பிரசாரம், HIV, ஹெபடைட்டிஸ் B, ஹெபடைட்டிஸ் C மற்றும் பாலியல் தொடர்பால் பரவும் தொற்றுகளின் புதிய பரவல்களைத் தடுப்பதற்கான «NAPS» தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு 2023 நவம்பரில் ஒப்புதல் அளித்திருந்தது.

தமிழ்ச் சமூகத்திற்கும் பயன்படும் தகவல்

சுவிட்சர்லாந்தில் வாழும் தமிழ் இளைஞர்களும் இந்த வயதுப் பிரிவில் அடங்குகின்றனர். பாலியல் ஆரோக்கியம் தொடர்பான சந்தேகங்களுக்கு நம்பகமான தகவல்களைப் பெறவும், பெற்றோர் மற்றும் இளைஞர்களிடையே தயக்கமின்றி மரியாதையுடன் உரையாடலை ஏற்படுத்தவும் இத்தகைய விழிப்புணர்வு முயற்சிகள் உதவக்கூடும்.

சுவிட்சர்லாந்தில் எய்ட்ஸ் தடுப்பு தொடர்பான நாடளாவிய விழிப்புணர்வுப் பிரசாரங்கள் 1987ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

VTS Finance GmbH
IMMOBILIEN • HYPOTHEKEN • FINANZIERUNGEN • VERSICHERUNGEN
IHRE ZIELE.
UNSERE LÖSUNGEN.
Kompetent, persönlich und zuverlässig –
für Ihre finanzielle Zukunft.
IHRE ZUKUNFT IN GUTEN HÄNDEN
NEU
IMMOBILIEN
Ihr Partner rund um Immobilien
Kauf & Verkauf
Immobilienvermitttung
Bewertung
Beratung bei Wohn- und Renditeobjekten
HYPOTHEKEN & FINANZIERUNGEN
Individuelle Lösungen zu besten Konditionen
Hypotheken für Wohneigentum
Hypothekenablösungen & Aufstockungen
Bau- & Renovations-Finanzierungen
Firmenfinanzierungen
Privatkredite
VERSICHERUNGEN
Optimaler Schutz für Sie und Ihre Liebsten
Krankenversicherungen
Lebensversicherungen
Vorsorge 3a & 3b
Fahrzeugversicherungen
Hausrat- & Privathaflpflichtversicherungen
Gebäudeversicherungen
Firmen- & Geschäfts-versicherungen
KREDITE
Schnell, unkompliziert und diskret
Privatkredite
Konsumentenkredite
Firmenkredite
Liquiditätslösungen
PERSÖNLICHE BERATUNG
Individuell auf ihre Bedurnisse abgestistmmt.
KOMPETENZ & ERFAHRUNG
Jahrelange Erlahrung und fundiertes Inow-how.
ZUVERLÄSSIG & TRANSPARENT
Faire Lösungen und klare Kommunikation.
SICHERHEIT & VERTRAUEN
Ihre Zufniedheit is it unser oberstes Ziel.
WIR SCHAFFEN WERTE.
FÜR HEUTE UND MORGEN.
Ob Immobilie, Hypothek, Finanzierung oder Versicherung – wir begleiten Sie auf ihrem Weg zu finanzieller Sicherheit und nachhaltigem Erfolg.
Ganzheitliche Beratung
Beste Konditionen
Schnelle Abwicklung
Langfristige Partnerschaft
RUFEN SIE UNS AN
078 920 58 58
Wir sind gerne für Sie da.
SCHREIBEN SIE UNS
info@vtsfinance.ch
Wir antworten schnell.
V.T.S. Finance GmbH
Gartenstadtstrasse 5
3098 Köniz
Ihr Vertrauen. Unsere Verantwortung. Gemeinsam in eine sichere Zukunft.

சுவிஸ் இலக்கியத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர் Gerold Späth காலமானார்

சுவிட்சர்லாந்தின் ஜெர்மன் மொழி இலக்கியத்தில் தனித்துவமான குரலாக விளங்கிய எழுத்தாளர் Gerold Späth, தனது 86ஆவது வயதில் அக்டோபர் 14ஆம் திகதி காலமானார். அவரது 87ஆவது பிறந்தநாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் இந்த மறைவு நிகழ்ந்துள்ளது.

குடும்பத்தினர் தெரிவித்த தகவலைத் தொடர்ந்து, Lenos பதிப்பகம் வியாழக்கிழமை அவரது மறைவை அறிவித்தது. “ஒரு சிறந்த கதைசொல்லியை இழந்துள்ளோம்” எனப் பதிப்பகம் அஞ்சலி தெரிவித்துள்ளது.

முதல் நாவலிலேயே கவனம் ஈர்த்தவர்

1970ஆம் ஆண்டு வெளியான அவரது முதல் நாவலான «Unschlecht», இலக்கிய உலகில் பெரும் கவனத்தைப் பெற்றது. குறிப்பாக 1970கள் மற்றும் 1980களில், சுவிட்சர்லாந்தின் ஜெர்மன் மொழி இலக்கியத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவராக அவர் விளங்கினார்.

மொழிவளம், கூர்மையான நகைச்சுவை மற்றும் ஆழமான சோகம் ஆகியவை அவரது படைப்புகளின் சிறப்பம்சங்களாகக் கருதப்படுகின்றன.

1939ஆம் ஆண்டு Rapperswil நகரில், இசைக்கருவியான ஆர்கன் தயாரிக்கும் குடும்ப மரபில் பிறந்த அவர், அமைதியான சுவிஸ் சமூகத் தோற்றத்தின் பின்னாலிருந்த குறுகிய மனப்பான்மை, தாமே சரியானவர்கள் என்ற எண்ணம் மற்றும் இரட்டை நிலைப்பாடுகளைத் தனது எழுத்துகளில் விமர்சித்தார்.

சுவிசில் தபால் சேவைகளில் மாற்றம் வருமா?

சட்டத் திருத்தங்களுக்கு எதிர்ப்பு!

கடித விநியோகம் எதிர்காலத்தில் வாரத்தில் மூன்று நாட்களாகக் குறைய வாய்ப்பு – தற்போது எந்த மாற்றமும் அமுலுக்கு வரவில்லை.

சுவிட்சர்லாந்தின் தபால் சேவைகளை மாறிவரும் மக்கள் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்க மத்திய அரசு முன்மொழிந்துள்ள சட்டத் திருத்தங்களுக்கு, இடதுசாரி மற்றும் வலதுசாரித் தரப்புகளிலிருந்து விமர்சனங்கள் எழுந்துள்ளன. இதற்கான பொதுக் கருத்துக்கேட்பு அக்டோபர் 15ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

ஏன் இந்த மாற்றம்?

கடிதங்கள் அனுப்புதல் மற்றும் தபால் நிலையங்களில் நேரடியாகப் பணம் செலுத்துதல் போன்ற சேவைகளின் பயன்பாடு தொடர்ந்து குறைந்து வருகிறது. இதனால் அடிப்படைத் தபால் சேவைகளைத் தனது வருவாயிலேயே வழங்குவதில் Swiss Post சவால்களை எதிர்கொள்கிறது. இந்த நிலைமைக்கேற்ப சேவைகளை மாற்றுவதற்கான சட்ட நடைமுறையை உருவாக்க அரசு விரும்புகிறது.

கடித விநியோகம் மூன்று நாட்களாகக் குறையுமா?

வரைவின்படி, கடிதங்கள், பொதிகள், பத்திரிகைகள் அல்லது நேரடிப் பண வைப்புகளின் வருடாந்தப் பயன்பாடு சட்டத்தில் குறிப்பிடப்படும் அளவுகளுக்குக் கீழே சென்றால், சேவைகளை மாற்ற Swiss Post விண்ணப்பிக்கலாம்.

உதாரணமாக, ஆண்டுக் கடித எண்ணிக்கை 80 கோடிக்குக் கீழே சென்றால், அத்தகைய கோரிக்கையை முன்வைக்க முடியும். ஆனால் சேவையைக் குறைப்பதற்கு மத்திய அரசின் முடிவு அவசியம்.

எதிர்காலத்தில் மாற்றம் அனுமதிக்கப்பட்டாலும், குறைந்தபட்சமாக:• சாதாரணக் கடிதங்கள் மற்றும் சந்தா தினசரிப் பத்திரிகைகள்

தவிர்ந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாரத்தில் மூன்று நாட்கள் விநியோகிக்கப்பட வேண்டும்.

• பொதிகள் மற்றும் சந்தா தினசரிப் பத்திரிகைகள் வாரத்தில் ஐந்து நாட்கள் விநியோகிக்கப்பட வேண்டும்.

தபால் நிலையங்கள் மூடப்படுமா?

தபால் நிலைய வலையமைப்பு சுருங்கக்கூடும் என்றும், விநியோக நாட்கள் குறையக்கூடும் என்றும் இடதுசாரிக் கட்சிகள் மற்றும் பிராந்தியத் தரப்புகள் அச்சம் தெரிவிக்கின்றன.

எனினும், குறிப்பிட்ட தபால் நிலையங்கள் மூடப்படும் என்ற இறுதி முடிவு இந்த முன்மொழிவில் இல்லை. நாடு முழுவதும் அடிப்படைச் சேவைகளை அணுகும் வசதி தொடர வேண்டும் என்றும், உள்ளூர் மற்றும் பிராந்திய நிலைமைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் வரைவு கூறுகிறது.

டிஜிட்டல் கடிதம் கட்டாயமா?

இல்லை. டிஜிட்டல் கடிதச் சேவையைப் பயன்படுத்துவது விருப்பத் தெரிவாகவே இருக்கும். ஏற்கெனவே ஒழுங்குவிதியின் கீழ் அடிப்படைச் சேவையில் சேர்க்கப்பட்டுள்ள இந்த வசதியை, சட்டத்திலும் உறுதிப்படுத்த அரசு முன்மொழிகிறது.

தபால் நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளுக்கும் கட்டுப்பாடு

Swiss Post மேற்கொள்ளும் கூடுதல் வணிகங்கள் அதன் பிரதான பணிகளுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்க வேண்டும். பெரிய நிறுவனப் பங்குகளைக் கையகப்படுத்துவதற்கு முன், தபால் கண்காணிப்பு அமைப்பான Post-Com அனுமதி பெறும் நடைமுறையும் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாடுகள் போதுமானதாக இல்லை என்றும், சந்தையைப் போட்டிக்குத் திறப்பதில் முன்மொழிவு மேலும் செல்ல வேண்டும் என்றும் வலதுசாரி மற்றும் சந்தை ஆதரவுத் தரப்புகள் விமர்சிக்கின்றன. Swiss Post நிறுவனமோ, மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப செயல்படும் சுதந்திரம் அவசியம் என மாற்றங்களை வரவேற்றுள்ளது.

மக்கள் தெரிந்துகொள்ள வேண்டியது

இந்தச் சட்டத் திருத்தங்கள் இன்னும் இறுதியாக நிறைவேற்றப்படவில்லை. சுமார் 2030இல் சட்டம் அமுலுக்கு வரும்போதே சேவைகள் தானாகக் குறைக்கப்படாது என அரசு விளக்கியுள்ளது. அதன் பின்னர் பயன்பாடு குறைவதற்கேற்ப, தனியான முடிவுகள் மூலம் மாற்றங்கள் ஏற்படலாம்.

சுவிசில் மோசடிப் பாதிப்புகள் ஏறத்தாழ இருமடங்கு:

புதிய ஆய்வில் தகவல்!

சுவிட்சர்லாந்தில் 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது மோசடியால் பாதிக்கப்படுவோர் விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக «Crime Survey 2025» ஆய்வு தெரிவிக்கிறது.

சூரிச் பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகம் (ZHAW) மற்றும் செங்காளன் பல்கலைக்கழகம் இணைந்து மேற்கொண்ட இந்த ஆய்வில், நாடு முழுவதும் 16 முதல் 80 வயதுக்குட்பட்ட 13,499 பேர் பங்கேற்றனர்.

மோசடிப் பாதிப்பு அதிகரிப்பு

ஓராண்டுக் காலப்பகுதியில் மோசடியால் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்தவர்களின் விகிதம்:

- 2022 ஆய்வில்: 8.4 சதவீதம்
- 2025 ஆய்வில்: 15.9 சதவீதம்

அதாவது, ஆய்வில் பங்கேற்றவர்களில் ஏறத்தாழ ஆறில் ஒருவர் மோசடியால் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

சொத்துத் தொடர்பான குற்றங்களாலும் பாதிப்புகள் அதிகரித்துள்ளன. அதேவேளை, பாலியல் வன்முறைக் குற்றங்களில் அதிகரிப்பு காணப்படவில்லை என ஆய்வு குறிப்பிடுகிறது.

புகார்கள் அதிகரித்ததால் மட்டும் ஏற்பட்ட உயர்வா?

பொலிஸில் புகாரளிக்கும் விகிதம் முந்தைய ஆய்வுடன் ஒப்பிடும்போது பெரும்பாலும் மாறவில்லை. எனவே, பதிவாகும் குற்றங்களின் அதிகரிப்பை மக்கள் அதிகமாகப் புகாரளிப்பதன் விளைவாக மட்டும் பார்க்க முடியாது; உண்மையான குற்ற அதிகரிப்பை இது காட்டுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பு உணர்வும் குறைவு

தமது பகுதியில் பொலிஸ் பிரசன்னம் போதுமானதாக இல்லை எனக் கூறியவர்களின் விகிதம், 2022இல் 28.9 சதவீதத்திலிருந்து 2025இல் 37.9 சதவீதமாக உயர்ந்துள்ளது.

சுவிசில் கடும் வெப்பத்தால் ரயில் பாதைகளில் 97 உருமாற்றங்கள்!

பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக SBB தெரிவிப்பு

சுவிட்சர்லாந்தில் 2026 கோடைக்காலத்தில் நிலவிய அசாதாரண கடும் வெப்பத்தால், ரயில் பாதைகள் வளைதல் மற்றும் வெப்ப அழுத்தத்தால் உருமாறுதல் உள்ளிட்ட 97 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சுவிஸ் மத்திய ரயில்வே நிறுவனம் (SBB/CFF) தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் 18ஆம் திகதி வெளியிட்ட விளக்கத்தில், சில சேவைகளில் தாமதங்களும் தனிப்பட்ட இரத்துகளும் ஏற்பட்டபோதிலும், ஒட்டுமொத்த ரயில் இயக்கம் சீராக இருந்ததாக நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்புக்கு என்ன நடவடிக்கைகள்?

பாதை உருமாற்றங்கள் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டு, உடனடியாகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக SBB கூறுகிறது. பின்னர் நிபுணர்கள் நேரில் ஆய்வு செய்து அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிக்கின்றனர்.

பாதைகளைக் கண்காணிக்க அளவீட்டு வாகனங்கள், உணரிகள் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றன. அதிகரித்த வெப்பப் பாதிப்புகளை ஆராய விசேட செயலணியும் அமைக்கப்பட்டுள்ளது.

வெள்ளைப் பூச்சு சோதனையில் என்ன முடிவு?

தண்டவாளங்களுக்கு வெள்ளைப் பூச்சிடுவதன் மூலம் ஆரம்பத்தில் சராசரியாக 4.5°C வெப்பக் குறைவு கிடைத்துள்ளது. எனினும், அழுக்கு படிவதால் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அதன் பயன் பாதியாகக் குறைந்துள்ளது. ரயில் போக்குவரத்து அதிகமுள்ள இடங்களில் இந்த விளைவு மேலும் விரைவாகக் குறைவதாக நிறுவனம் தெரிவிக்கிறது.

இதனால், மரத்தாலான தண்டவாளத் தாங்கிகளுக்குப் பதிலாக அதிக உறுதித்தன்மையுள்ள கொங்கிரீட் தாங்கிகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட நீண்டகால நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

“ஆபத்தை முற்றிலும் இல்லாமல் செய்ய முடியாது. இருப்பினும், தற்போதைய தகவல்களின் அடிப்படையில் SBB ரயில் வலையமைப்பு பாதுகாப்பாக உள்ளது” என நிறுவனம் தெரிவித்துள்ளது.

THIS IS TAMIL: அணிந்து செல்லும் தாயகம்



சுவிட்சர்லாந்தில் உருவான, தமிழ்ப் பண்பாட்டை வேராகக் கொண்ட THIS IS TAMIL, அன்றாட ஆடைப் பாணியுடன் ஒரு குடும்பத்தின் வாழ்க்கைக் கதையையும் இணைக்கிறது. இந்த ஆடை நிறுவனத்தின் பின்னால் நிற்கும் கண்டி தமிழ்ச்செல்வன், தமிழ் அடையாளத்தை வெளிப்படுத்துவதோடு, உதவி தேவைப்படும் மக்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கவும் விரும்புகிறார்.

ஒரு குடும்பம் தனது தாயகத்தை விட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டால், தாயகத்தின் எந்தப் பகுதியைத் தன்னுடன் எடுத்துச் செல்கிறது? மொழி, நினைவுகள், கதைகள் – அவற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற விருப்பம். கண்டி தமிழ்ச்செல்வனுக்கு இது தனது குடும்ப வரலாற்றுடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்த கேள்வி.

1980களின் தொடக்கத்தில், இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாக அவரது பெற்றோர் நாட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. பலவற்றை விட்டுவிட்டு, புதிய நாட்டில் வாழ்க்கையை மீண்டும் தொடங்கினர். அவர்களின் துணிச்சலும், புதியதொரு வாழ்வை உருவாக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளும் இன்று THIS IS TAMIL உருவானதற்கான தனிப்பட்ட பின்னணியாக அமைந்துள்ளன.

சுவிட்சர்லாந்தில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம், உலகெங்கும் வாழும் தமிழர்களையும், தமிழ்ப் பண்பாட்டை அறிந்துகொள்ள விரும்பும் அனைவரையும் சென்றடைய விரும்புகிறது. அடையாளம், பண்பாடு, சமூகம் ஆகியவை அதன்

மையக் கருத்துகள். ஆடைகளின் வழியாகத் தாயக வேர்களுக்கும் இன்றைய வாழ்க்கைக்கும், வெவ்வேறு நாடுகளில் வாழும் மக்களுக்கும், தலைமுறைகளுக்கும் இடையே ஒரு தொடர்பை உருவாக்குவதே அதன் நோக்கம்.

அன்றாட வாழ்வில் பண்பாட்டின் கதைகள்

இந்த எண்ணத்தை THIS IS TAMIL நவீன அன்றாட ஆடைகளாக வடிவமைக்கிறது. டி-ஷர்ட்கள், ஸ்வெட்ஷர்ட்கள், ஹூடிகள் ஆகியவை அதன் தயாரிப்புகளில் இடம்பெறுகின்றன. AMMA, ARIKAMEDU போன்ற வடிவமைப்புகள் தமிழ்ப் பண்பாட்டுடன் தொடர்புடைய பெயர்களைக் கொண்டுள்ளன. AMMA டி-ஷர்ட், Classic மற்றும் தடிமனான துணியால் தயாரிக்கப்படும் Heavyweight ஆகிய இரு வகைகளிலும் வழங்கப்படுகிறது. இயற்கை நிறம், வெள்ளை, கருப்பு போன்ற நிறங்கள் வடிவமைப்புகளுக்கு அடித்தளமாக அமைகின்றன.

தமிழ்ச் சொற்கள், எழுத்துகள், பண்பாட்டுக் கதைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஆடைகளை வடிவமைப்பதாக நிறுவனம் தெரிவிக்கிறது. இதன் மூலம் தமிழ் எழுத்துகள் அன்றாட வாழ்வில் கண்களுக்குத் தெரியும் இடத்தைப் பெறுகின்றன. அவை கேள்விகளுக்கும் உரையாடல்களுக்கும் வழிவகுக்கலாம். ஓர் ஆடை, அதை அணிபவரின் அடையாளத்தையும் பண்பாட்டுத் தொடர்பையும் வெளிப்படுத்தும் ஊடகமாகிறது.

தடிமனான பருத்தித் துணியும் தெளிவான வடிவமைப்பும் நிறுவனத்தின் தரம் குறித்த நோக்கத்தில் இடம்பெறுகின்றன. ஒரு பருவத்தின் பாணியுடன் முடிந்துவிடாமல், நீண்ட காலம் அணியக்கூடியதும் அர்த்தம் கொண்டதுமான ஆடைகளை உருவாக்குவதே அதன் எண்ணம்.

பல நாடுகள்,
ஒரு பண்பாட்டுப் பிணைப்பு

சூரிச், டொரொன்டோ, லண்டன், பாரிஸ், சென்னை, யாழ்ப்பாணம் – நாடுகளின் எல்லைகளைக் கடந்து இணைந்திருக்கும் தமிழ்ச் சமூகத்தின் இடங்களாக இந்நகரங்களை THIS IS TAMIL குறிப்பிடுகிறது. எங்கு வாழ்ந்தாலும், தமது வேர்களுடன் தொடர்பைத் தொடர முடியும் என்பதே அதன் கருத்து. நிறுவனரின் குடும்பக் கதையில் தமிழீழ வேர்களுக்கு ஒரு முக்கிய இடம் உள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் பல குடும்பங்களுக்குப் பரிச்சயமான அனுபவத்தை இந்த நிறுவனம் பிரதிபலிக்கிறது: புதியதொரு வாழ்வை அமைத்துக்கொள்வதோடு, மொழியையும் பண்பாட்டையும் நினைவுகளையும் தொடர்ந்து பேணுவது. அடுத்த தலைமுறையினர் அந்தத் தொடர்பைத் தங்களுக்குரிய முறையில் வெளிப்படுத்த ஆடைகள் ஒரு வாய்ப்பாக அமையலாம்.

தமிழ்ப் பண்பாடு நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் தனக்கான இடத்தைப் பெற வேண்டும் என்பதைக் கண்டி தனது நிறுவனத்தின்

வழியாக வெளிப்படுத்த விரும்புகிறார். மக்களின் மொழியிலும் கதைகளிலும் படைப்பாற்றலிலும் அது தொடர்ந்து வாழ்கிறது.

சமூகத்திற்குத் திருப்பிக் கொடுத்து, எதிர்காலத்தை உருவாக்குதல்

THIS IS TAMIL மூலம் மக்களுக்கு ஏதாவது திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பது கண்டி தமிழ்ச்செல்வனின் விருப்பம். அவரது பெற்றோரின் புதிய வாழ்க்கைப் பயணம், சமூகப் பொறுப்பு குறித்த அவரது எண்ணத்தையும் வடிவமைத்துள்ளது. தனது குடும்பத்திற்குக் கிடைத்த வாய்ப்புகள், பிறருக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்க உதவ வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

இதற்காக உருவாக்கப்பட்டுள்ள THE 1M FUTURES PROJECT மூலம், விற்பனையாகும் ஒவ்வொரு பொருளின் வருவாயிலிருந்தும் ஒரு பகுதியை உதவி தேவைப்படும் குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் முக்கியமான உதவித் திட்டங்களுக்காக ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு விற்பனையும் மக்களின் வாழ்க்கைச் சூழலை நீண்ட காலத்தில் மேம்படுத்துவதற்கான ஒரு பங்களிப்பாக அமைய வேண்டும் என்பதே நோக்கம்.

கண்டியின் இலக்கு பெரியது. கல்வி மற்றும் மேலதிகப் பயிற்சிக்கான வாய்ப்புகளை உருவாக்குவது, பள்ளிகளுக்கும் மருத்துவமனைகளுக்கும் ஆதரவளிப்பது, அடிப்படை வசதிகளும் சேவைகளும் போதாமையாக உள்ள இடங்களில் உதவுவது ஆகியவை அவரது எண்ணங்களில் அடங்குகின்றன. பள்ளிப் பொருட்கள், மருத்துவ உதவி மற்றும் இதுவரை போதிய ஆதரவு கிடைக்காத பிற முக்கியத் தேவைகளுக்கும் பங்களிக்க அவர் விரும்புகிறார். இந்த உதவிகள் மக்களின் அன்றாட வாழ்க்கையை எளிதாக்குவதோடு, எதிர்காலத்திற்கான வாய்ப்புகளையும் உருவாக்க வேண்டும்.

இதன் மூலம் உருவாகும் கூட்டாண்மைகள், ஆதரிக்கப்படும் திட்டங்கள் மற்றும் நிதியின் பயன்பாடு ஆகியவற்றைத் தனது இணையதளத்தில் பதிவு செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது. சமூகத்திற்குத் திருப்பிக் கொடுப்பது THIS IS TAMIL-இன் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகிறது.

இடம்பெயர்வு, துணிச்சல், புதிய தொடக்கம் ஆகியவற்றால் உருவான ஒரு குடும்பக் கதையிலிருந்து, தனிப்பட்ட நோக்கத்தைக் கொண்ட ஆடை நிறுவனம் பிறந்துள்ளது. தனது சமூகத்தின் வேர்களை வெளிப்படுத்துவதோடு, மற்றவர்களுக்குச் சிறந்த வாய்ப்புகள் கிடைக்கவும் கண்டி பங்களிக்க விரும்புகிறார். அணிந்து செல்லும் ஒரு தாயகம் – பிறரின் எதிர்காலத்திற்கும் உதவ வேண்டும் என்ற நம்பிக்கையுடன்.

www.thisistamil.co

மதுரோவுடன் தொடர்புடைய மேலும் ஆறு பேரின் சொத்துகளை முடக்க சுவிஸ் நடவடிக்கை!

வெனிசுவேலாவின் முன்னாள் ஜனாதிபதி நிக்கொலஸ் மதுரோவுடன் தொடர்புடையவர்களின் சொத்து முடக்கப் பட்டியலில் மேலும் ஆறு பேரை சுவிட்சர்லாந்து இணைத்துள்ளது. முன்னாள் தொழில்துறை அமைச்சர் அலெக்ஸ் சாப் மற்றும் அவருடன் தொடர்புடைய வர்த்தகர் அல்வாரோ புலிடோ வர்காஸ் ஆகியோரும் இதில் அடங்குகின்றனர்.

அதேவேளை, மார்லெனி கொன்ட்ரேராஸ் மற்றும் ஹோர்ஹே அரேயாசா ஆகிய இருவரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

இதனால் மதுரோ உட்பட பட்டியலில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது. இந்த மாற்றம் ஒக்டோபர் 16ஆம் திகதி அமுலுக்கு வந்துள்ளது.

பட்டியலில் உள்ளவர்களுக்குச் சொந்தமான சொத்துகளை சுவிட்சர்லாந்தில் வைத்திருக்கும் அல்லது நிர்வகிக்கும் நிறுவனங்கள், அவற்றை உடனடியாக முடக்கி பணச்சலவைத் தகவல் அலுவலகத்திற்கு (MROS) அறிவிக்க வேண்டும் என சுவிஸ் நிதிச்சந்தைக் கண்காணிப்பு அமைப்பான FINMA தெரிவித்துள்ளது

சூரிச்சில் காலியாக உள்ள வீடுகள் சற்று அதிகரிப்பு

வீட்டுத் தட்டுப்பாடு தொடர்கிறது!

சூரிச் மாநிலத்தில் 2026 ஜூன் முதலாம் திகதி 4,189 வீடுகள் காலியாக இருந்ததாக மாநில புள்ளிவிபரத் தரவுகள் தெரிவிக்கின்றன. இது முந்தைய ஆண்டைவிட 374 வீடுகள் அதிகமாகும். காலி வீடுகளின் விகிதம் 0.48 சதவீதத்திலிருந்து 0.52 சதவீதமாக மட்டுமே உயர்ந்துள்ளது.

சூரிச் நகரில் இந்த விகிதம் 0.11 சதவீதமாகவும், வின்டர்தூரில் 0.20 சதவீதமாகவும் உள்ளது. மாநிலத்தின் அனைத்துப் பிராந்தியங்களிலும் காலி வீடுகளின் விகிதம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகிறது.

காலியாக உள்ள வீடுகளில் 75 சதவீதத்திற்கும் அதிகமானவை வாடகை வீடுகளாகும். இருப்பினும், காலி வாடகை வீடுகளின் எண்ணிக்கை கடந்த பத்து ஆண்டுகளின் சராசரியைவிட கிட்டத்தட்ட 30 சதவீதம் குறைவாக உள்ளது.

காலி வீடுகளின் எண்ணிக்கை சற்று அதிகரித்திருந்தாலும், வீட்டுத் தேவை அதிகமாகவும் புதிய வீடுகளின் உருவாக்கம் குறைவாகவும் இருப்பதால் சூரிச் மாநிலத்தில் வீட்டுத் தட்டுப்பாடு தொடர்கிறது.

செங்காலனில் ட்ரோன் போக்குவரத்துக் கண்காணிப்பு:

சட்ட அடிப்படை குறித்து FDP உறுப்பினர்கள் கேள்வி!

செங்காலன் மாநிலத்தில் ட்ரோன்கள் மூலம் போக்குவரத்தைக் கண்காணிக்கும் பொலிஸாரின் நடவடிக்கைக்கு, பிரத்தியேகமான சட்ட அடிப்படை உள்ளதா என FDP கட்சியைச் சேர்ந்த மூன்று மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இத்தகைய கண்காணிப்பின்போது, விதிமீறல்களில் ஈடுபடாத ஏனைய வீதிப் பயனாளர்களின் தனியுரிமையும் பாதிக்கப்படக்கூடும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்குப் பதிலாக, ட்ரோன் மூலமான வேகக் கண்காணிப்பை ஏற்றுக்கொண்ட 2024ஆம் ஆண்டின் துர்காவ் உயர் நீதிமன்றத் தீர்ப்பை செங்காலன் மாநிலப் பொலிஸார் மேற்கோள் காட்டியுள்ளனர்.

எனினும், விரிவான வான்வழிக் கண்காணிப்பை நியாயப்படுத்த அந்தத் தீர்ப்பு மட்டுமே போதுமானதா என விமர்சகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

சூரிச்சில் பனிச்சறுக்குப் பருவம் ஆரம்பம்

இரண்டு நாட்கள் இலவச அனுமதி!

சூரிச் நகரின் Dolder, Heuried மற்றும் Oerlikon ஆகிய மூன்று செயற்கைப் பனிச்சறுக்குத் திடல்களிலும் குளிர்காலப் பருவம் ஒக்டோபர் 17ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. 2027 மார்ச் 7ஆம் திகதி வரை இப்பருவம் நடைபெறவுள்ளது.

குடும்பத்தினருடன் பனிச்சறுக்கை அனுபவிக்க விரும்புவோருக்கு, 2026 நவம்பர் 8 மற்றும் 2027 பெப்ரவரி 7 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை, இந்த மூன்று திடல்களிலும் நுழைவும் பனிச்சறுக்குச் சப்பாத்து வாடகையும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. கூட்டம் காரணமாகக் காத்திருக்க வேண்டியிருக்கலாம் என நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

Dolder திடலில் வழக்கமான நுழைவுக் கட்டணம் பெரியவர்களுக்கு 8 பிராங்குகள், இளைஞர்களுக்கு 6 பிராங்குகள், சிறுவர்களுக்கு 4 பிராங்குகளாகும்.

சுவிசில் எல்லைப் பாதுகாப்பு

முன்முயற்சியை நிராகரிக்கப் பரிந்துரை!

சுவிட்சர்லாந்தில் முறையான எல்லைச் சோதனைகளை மீண்டும் அறிமுகப்படுத்தவும், ஆண்டுதோறும் புகலிடம் வழங்கப்படுவோரின் எண்ணிக்கையை 5,000 ஆகக் கட்டுப்படுத்தவும் கோரும் முன்முயற்சியை நிராகரிக்குமாறு, மாநிலங்களவையின் அரசியல் நிறுவனங்கள் குழு 8-2 வாக்குகளால் பரிந்துரைத்துள்ளது.

இந்த முன்முயற்சி பொருளாதாரம், சுற்றுலா, அண்டை நாடுகளிலிருந்து வேலைக்கு வருவோரின் பயணம் மற்றும் எல்லை தாண்டிய பொலிஸ் ஒத்துழைப்பைப் பாதிக்கலாம் எனக் குழுவின் பெரும்பான்மை எச்சரித்துள்ளது. சிறுபான்மை உறுப்பினர்கள், இது பாதுகாப்பை மேம்படுத்தும் என ஆதரவு தெரிவித்துள்ளனர்.

முன்முயற்சி அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் மாநிலங்களவையில் விவாதிக்கப்படலாம். தற்போதைய முடிவு குழுவின் பரிந்துரை மட்டுமே; இறுதி நிராகரிப்பு அல்ல.

சூரிச்சில் ஓட்டுநரற்ற ரோபோ டாக்சிகளுக்கு இடதுசாரிக் கட்சிகள் எதிர்ப்பு!

சூரிச்சில் ஓட்டுநரற்ற ரோபோ டாக்சிகளை அறிமுகப்படுத்துவதைத் தடுக்க முடியுமா என ஆராயுமாறு SP, பசுமைக் கட்சி மற்றும் AL ஆகிய கட்சிகள் நகர நிர்வாகத்தைக் கோரியுள்ளன. இதற்கான முன்மொழிவு சூரிச் நகரசபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்குள் சூரிச்சில் ரோபோ டாக்சிகளை அறிமுகப்படுத்தும் Uber நிறுவனத்தின் திட்டமே இந்த எதிர்ப்புக்குக் காரணமாகும். டிராம், சைக்கிள் மற்றும் பாதசாரிகள் நிறைந்த சிக்கலான நகரப் போக்குவரத்தில், இவ்வாகனங்கள் பாதுகாப்பு அபாயத்தையும் மேலதிக நெரிசலையும் ஏற்படுத்தலாம் எனக் கட்சிகள் கவலை தெரிவித்துள்ளன.

தடை விதிக்க முடியாவிட்டால், குடியிருப்புப் பகுதிகளில் வாகன நுழைவுக் கட்டுப்பாடு, குறைந்த வேக வரம்பு மற்றும் ரோபோ டாக்சிகளின் எண்ணிக்கைக்கு வரம்பு போன்ற கடுமையான நிபந்தனைகளை விதிக்க வேண்டும் என அவை வலியுறுத்துகின்றன

சூரிச் Albisrieden இல் Siemensக்கு புதிய தலைமையகம்

2031க்குள் அமைக்கத் திட்டம்!

Siemens Schweiz நிறுவனம், சூரிச் Albisrieden பகுதியில் உள்ள தனது 30,500 சதுர மீற்றர் வளாகத்தை ரியல் எஸ்டேட் முதலீட்டு நிறுவனமான Procimmoவிற்கு விற்பனை செய்துள்ளது. விற்பனைத் தொகை வெளியிடப்படவில்லை.

அதே வளாகத்தின் வடமேற்குப் பகுதியில், தற்போது வாகனத் தரிப்பிடமாகப் பயன்படுத்தப்படும் இடத்தில் புதிய சுவிஸ் தலைமையகம் அமைக்கப்படவுள்ளது. 2031ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்குள் கட்டுமானத்தை நிறைவுசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அதுவரை தற்போதைய கட்டடங்களின் ஒரு பகுதியை Siemens வாடகைக்குப் பயன்படுத்தும்.

நூறு ஆண்டுகளுக்கும் மேலாக Albisriedenஇல் இயங்கிவரும் Siemens, புதிய தலைமையகத்தின் மூலம் அப்பகுதியில் தனது நீண்டகாலச் செயற்பாட்டைத் தொடரவுள்ளது.

SAVE THE DATE
வெள்ளிவீதி
இலக்கியக் கூடுகை 2
அமர்வு 1
எழுத்தாளர் - மொழிபெயர்ப்பாளர்
காயத்ரி ஆர்.
அமர்வு 2
எழுத்தாளர்
தில்லை
அமர்வு 3
எழுத்தாளர்
தர்மினி
அமர்வு 4
எழுத்தாளர்
நவமகன்
அமர்வு 5
எழுத்தாளர் - மொழிபெயர்ப்பாளர்
பிரசாந்தி சேகரம்
அமர்வு 6
எழுத்தாளர் - அரங்கக் கலைஞர்
லிவிங் ஸ்மைல் வித்யா
01.11.2026
SUNDAY
ZÜRICH, SWITZERLAND
சயந்தன் /
+4179 519

செங்காலன்வில் ரயில் நிலைய மேம்பாட்டுக்கு 63.7 மில்லியன் பிராங்க் நவம்பர் 29 இல் வாக்கெடுப்பு!

செங்காளன் மாநிலத்தின் வில் (Wil) ரயில் நிலைய வளாகத்தில் புதிய பேருந்து முனையம் மற்றும் நிலத்தடி சைக்கிள் நிறுத்துமிடம் அமைப்பதற்கான 63.662 மில்லியன் பிராங்க் கட்டுமான நிதி ஒதுக்கீடு குறித்து, 2026 நவம்பர் 29ஆம் திகதி நகர மக்கள் வாக்களிக்கவுள்ளனர்.

தற்போது பேருந்துகள், கார்கள், சைக்கிள்கள் மற்றும் பாதசாரிகள் குறுகிய இடத்தைப் பகிர்ந்துகொள்வதால், நிலைய வளாகத்தில் நெரிசலும் குழப்பமும் ஏற்படுகின்றன. இதனைச் சீரமைத்து, பயணிகள் ரயில் மற்றும் பேருந்துகளுக்கு இடையில் எளிதாக மாறிச் செல்லவும், தடையற்ற அணுகலை ஏற்படுத்தவும் இத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய பேருந்து முனையத்தில் 20 நிறுத்துமிடங்களும், பயணிகள் காத்திருக்கும் மத்திய நடைமேடையில் சுமார் 120 மீற்றர் நீளமான கூரையும் அமைக்கப்படவுள்ளன. உயர்த்தப்பட்ட பேருந்து நிறுத்த மேடைகள் மூலம் மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் மற்றும் குழந்தை வண்டிகளுடன் பயணிப்போர் படிக்கட்டின்றி பேருந்துகளில் ஏறக்கூடிய வசதி ஏற்படுத்தப்படும்.

நிலையச் சதுக்கத்தின் கீழ் சைக்கிள்கள், மின்சார சைக்கிள்கள் உள்ளிட்டவற்றுக்கு 1,100க்கும் மேற்பட்ட பாதுகாக்கப்பட்ட நிறுத்துமிடங்கள் அமைக்கப்படும். பேருந்து முனையத்திற்குத் தேவையான இடத்தை உருவாக்குவதற்காக, Frauenfeld-Wil ரயிலின் இறுதி நிறுத்தம் சுமார் 85 மீற்றர் மேற்குநோக்கி மாற்றப்படவுள்ளது.

Obere Bahnhofstrasse வீதியில் இருபுறமும் சைக்கிள் பாதைகள் மற்றும் மூன்று பாதுகாப்பான பாதசாரிக் கடவைகள் அமைக்கப்படுவதுடன், மணிக்கு 30 கிலோமீற்றர் வேகத்திற்கேற்ப வீதி வடிவமைக்கப்படும். Allee பகுதி நடைப்பயணத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்தப்பட்டு, காலநிலைக்கு ஏற்ற புதிய மரங்களும் நடப்படவுள்ளன. நிலையச் சதுக்கம் வழியாக வாகனங்கள் நேரடியாகச் செல்லும் வசதி நீக்கப்பட்டாலும், வாகன நிறுத்துமிடத்திற்கும் டாக்சி நிறுத்தங்களுக்கும் அணுகல் தொடரும்.

மத்திய அரசு, மாநிலம் மற்றும் ஏனைய பங்காளிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நிதிப் பங்களிப்புகளைக் கழித்த பின்னர், வில் நகரம் ஏற்க வேண்டிய தொகை சுமார் 33.429 மில்லியன் பிராங்குகளாகும். நகர நாடாளுமன்றம் இத்திட்டத்தை 26 ஆதரவு வாக்குகளுடனும் 11 எதிர்ப்பு வாக்குகளுடனும் ஏற்றுக்கொண்டு, மக்களும் ஆதரிக்குமாறு பரிந்துரைத்துள்ளது.

வாக்கெடுப்பில் ஒப்புதல் கிடைத்தால், கட்டுமானப் பணிகள் 2029ஆம் ஆண்டு ஆரம்பமாகி, 2033ஆம் ஆண்டு நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது

ஆவே மரியா சுவிஸ் தமிழ்க்குழு அழைத்துச்செல்லும்
இத்தாலி நாட்டில் பாதுவா நகரில்
தூய அந்தோனியாரின் அழியாத நாக்கும்,
புனித உடலும் உள்ள திருத்தலத்திற்கும்
மூன்று ரோஜா அன்னையின்
திருத்தலத்திற்கும்
புனித யாத்திரை
2026
AVE MARIA - SWISS TAMIL GROUP
காலம் : 24-10-2026 சனிக்கிழமை காலை புறப்பட்டு,
25-10-2026 ஞாயிற்றுக்கிழமை இரவு திரும்புவது
2 நாள் பயணம்
1 இரவு தங்குவது
3 நேர உணவு மற்றும்
திருப்பலிகளும் இடம்பெறும்.
புறப்படும் இடங்கள் : பேர்ன், கொலுத்தாண், பாசல், சூரிச், லூசேர்ன்
தொடர்புகளுக்கு : வின்சன் - 079 209 07 76
யேசு - 076 371 28 81

“அனைத்து
விடயங்களும்
மக்களுக்காகவே”
www.supeedsam.com
இங்கே
கிளிக்
செய்க

சுவிசில் எரிபொருள் விலை உயர்வு: குறைந்த விலைக்காக ஒஸ்திரியா செல்லும் வாகன ஓட்டிகள்!

சுவிட்சர்லாந்தில் எரிபொருள் விலை உயர்ந்துள்ளதால், எல்லையோரப் பகுதிகளில் வசிக்கும் சில வாகன ஓட்டிகள் குறைந்த விலையில் எரிபொருள் நிரப்புவதற்காக அண்டை நாடான ஒஸ்திரியாவுக்குச் செல்கின்றனர்.

Nau.ch வெளியிட்டுள்ள செய்தியின்படி, சுவிசில் ஒரு லீற்றர் பெட்ரோல் 95 சுமார் 2.16 பிராங்குகளாகவும், டீசல் சுமார் 2.46 பிராங்குகளாகவும் உள்ளது. மத்திய கிழக்கு மோதலும் ஹோர்முஸ் நீரிணையைச் சூழ்ந்துள்ள சிக்கலான நிலைமையும் எண்ணெய் விலை உயர்வுக்குக் காரணங்களாகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒஸ்திரியாவில் பெட்ரோல் 95 ஒரு லீற்றர் சுமார் 1.83 யூரோ, அதாவது செய்தியில் பயன்படுத்தப்பட்ட நாணய மாற்றுக் கணக்கின்படி சுமார் 1.69 பிராங்குகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டீசல் ஒரு லீற்றர் சுமார் 2.14 யூரோ, அதாவது 1.98 பிராங்குகளாகும். இதன்படி, சுவிசுடன் ஒப்பிடும்போது லீற்றருக்கு ஏறத்தாழ 47 முதல் 48 ராப்பன் வரை வித்தியாசம் காணப்படுகிறது.

சூரிச்சில் கழிவுச் சேகரிப்பு டிராம் சேவை நிறைவு:

2027 முதல் 33 இடங்களில் மாற்றுச் சேவை!

சூரிச் நகரில் நீண்டகாலமாகச் செயல்பட்ட கழிவுச் சேகரிப்பு டிராம் சேவை நிறைவுக்கு வருகிறது. ஒக்டோபர் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை Hirzenbach பகுதியில் இறுதியாக நிறுத்தம் மேற்கொள்ளவுள்ளது. இதற்குப் பதிலாக, 2027ஆம் ஆண்டு முதல் நகரின் 33 இடங்களில் மின்சார லொறிகள் மூலம் நடமாடும் மறுசுழற்சி நிலையச் சேவை வழங்கப்படவுள்ளது.

இதுவரை 11 நிறுத்தங்களில் பெரிய கழிவுப் பொருட்கள், கட்டுமான இடிபாடுகள் மற்றும் உலோகங்களைச் சேகரிக்க Cargo-Tram பயன்படுத்தப்பட்டது. மின்சாதனக் கழிவுகளைச் சேகரிப்பதற்காக E-Tram இயங்கியது. இந்த நிறுத்தங்களுடன், டிராம் சென்றடைய முடியாத மேலும் 22 இடங்களுக்கும் புதிய சேவை விரிவுபடுத்தப்படுகிறது.

2022ஆம் ஆண்டு நான்கு இடங்களில் சோதனை முயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட நடமாடும் மறுசுழற்சி நிலையம், பின்னர் பல குடியிருப்புப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. கழிவுகளை ஒப்படைப்பதுடன், பொருட்களைப் பரிமாறிக்கொள்ளவும் பழுதுபார்த்தல் தொடர்பான ஆலோசனைகளைப் பெறவும் இச்சேவை வாய்ப்பளிக்கிறது.

இந்த ஆண்டு இறுதிக்குள் Leimbach பகுதியும் சேவையில் இணைக்கப்படவுள்ளது. 2027 முதல் Alt-Wiedikon பகுதி மக்களும் இந்த இலவசச் சேவையைப் பயன்படுத்த முடியும். Wipkingen பகுதியில், Waidhalde பாடசாலைக்குப் பதிலாக Röschibachplatz இல் நடமாடும் மறுசுழற்சி நிலையம் நிறுத்தப்படும்.

இடப்பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டும் குடியிருப்புப் பகுதிகளில் கூடுதல் போக்குவரத்தைத் தவிர்ப்பதற்காகவும், கழிவுகளை ஒப்படைக்கக் காரில் வருவதற்கு அனுமதி இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூரிச்சில் டிசம்பர் 13 முதல் பொதுப் போக்குவரத்துக் கட்டண உயர்வு!

சூரிச் போக்குவரத்து வலையமைப்பின் ZVV கட்டணங்கள், 2026 டிசம்பர் 13ஆம் திகதி முதல் சராசரியாக 2.7 சதவீதம் அதிகரிக்கவுள்ளன. வருடாந்தப் போக்குவரத்து நேர அட்டவணை மாற்றத்துடன் நடைமுறைக்கு வரும் இந்தக் கட்டணத் திருத்தத்திற்கு சூரிச் மாநில அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

சூரிச் நகரம் அல்லது Winterthur நகருக்குள் பயணிப்பதற்கான வழமையான இரண்டாம் வகுப்பு 1-2 வலய ஒற்றைப் பயணச்சீட்டின் விலை 4.70 பிராங்கிலிருந்து 4.80 பிராங்காக உயரவுள்ளது. வழமையான மாதாந்த மற்றும் வருடாந்தப் பயண அட்டைகளின் கட்டணங்கள் சராசரியாக 2.1 சதவீதம் அதிகரிக்கும்.

மாநிலம் முழுவதற்கும் செல்லுபடியாகும், மற்றொருவருக்கு மாற்றிப் பயன்படுத்தக்கூடிய «9-Uhr-Monatsabo» மாதாந்தப் பயண அட்டையின் விலை 162 பிராங்கிலிருந்து 174 பிராங்காக உயரவுள்ளது. இது 7.4 சதவீத அதிகரிப்பாகும்.

இதனிடையே, Mehrfahrtenkarten எனப்படும் பலபயண அட்டைகளுக்கு வழங்கப்பட்டுவந்த மீதமுள்ள தள்ளுபடிகளும் நீக்கப்படுகின்றன. இதனால், ஆறு பயணங்களுக்கான அட்டையின் விலை, ஆறு தனித்தனி ஒற்றைப் பயணச்சீட்டுகளை வாங்கும் மொத்தத் தொகைக்குச் சமமாக இருக்கும்.

எனினும், குறுந்தூரப் பயணச்சீட்டுகள் – Kurzstrecke மற்றும் உள்ளூர் போக்குவரத்து வலையமைப்புகளுக்கான Lokalnetze கட்டணங்களில் மாற்றம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்கள் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்புகளைப் பராமரித்தல், புதுப்பித்தல் மற்றும் சேவைகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றுக்கான செலவுகள் அதிகரித்துள்ளதே கட்டண உயர்வுக்கான முக்கிய காரணம் என ZVV விளக்கமளித்துள்ளது. மாநில நாடாளுமன்றத்தின் வழிகாட்டலின்படி, இயக்கச் செலவுகளில் 60 சதவீதத்திற்கும் அதிகமான தொகையைப் பயணச்சீட்டு மற்றும் பயண அட்டை வருமானம் மூலம் ஈடுசெய்ய வேண்டியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் 2027 முதல் குறைந்தபட்ச ஊதியம் உயர்வு: மணித்தியாலத்திற்கு 24.73 பிராங்குகள்!

ஜெனீவா மாநிலத்தில் 2027 ஜனவரி 1ஆம் திகதி முதல் குறைந்தபட்ச மொத்த ஊதியம் மணித்தியாலத்திற்கு 24.73 பிராங்குகளாக அதிகரிக்கவுள்ளது. தற்போது வழங்கப்படும் 24.59 பிராங்குகளுடன் ஒப்பிடும்போது, இது மணித்தியாலத்திற்கு 14 ராப்பன் அதிகரிப்பாகும். வாழ்க்கைச் செலவுக்கேற்ப மேற்கொள்ளப்படும் வருடாந்தத் திருத்தத்தின் அடிப்படையில் இந்த உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

வாரத்திற்கு 40 மணித்தியால வேலை மற்றும் ஆண்டுக்கு 12 மாதாந்தக் கொடுப்பனவுகள் என்ற கணக்கீட்டின்படி, புதிய குறைந்தபட்ச ஊதியம் மாதத்திற்கு சுமார் 4,286.53 பிராங்குகளாகும். இது சமூகக் காப்புறுதி உள்ளிட்ட கழிவுகளுக்கு முந்தைய மொத்தத் தொகையாகும்.

விவசாயம் மற்றும் மலர்ச்செய்கைத் துறைகளுக்கான குறைந்தபட்ச மணித்தியால ஊதியமும் 18.07 பிராங்கிலிருந்து 18.17 பிராங்காக உயரவுள்ளது.

இதனிடையே, சில துறைகளில் பொதுவாகக் கட்டுப்படுத்தும் வகையில் அமுல்படுத்தப்படும் கூட்டு வேலை ஒப்பந்தங்களுக்கு, மாநிலக் குறைந்தபட்ச ஊதியச் சட்டங்களைவிட முன்னுரிமை வழங்கும் நாடாளுமன்றத் திருத்தம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி, குறிப்பிட்ட கூட்டு ஒப்பந்தங்களில் குறைந்த ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் அவற்றுக்கு முன்னுரிமை கிடைக்கக்கூடும் எனச் செய்தி தெரிவிக்கிறது.

இந்தத் திருத்தத்தை எதிர்த்து தொழிற்சங்கங்களும் இடதுசாரிக் கட்சிகளும் ஒக்டோபர் 7ஆம் திகதி ஒரு இலட்சத்திற்கும் அதிகமான கையெழுத்துகளைச் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டு ஒப்பந்தங்களுக்கு வலுவான இடமளிக்க வேண்டும் என ஆதரவாளர்கள் கூறும் நிலையில், மாநிலங்களின் குறைந்தபட்ச ஊதியப் பாதுகாப்பு பலவீனமடையக்கூடும் என எதிர்ப்பாளர்கள் எச்சரிக்கின்றனர்.

ஜெனீவாவில் அறிவிக்கப்பட்டுள்ள 2027 ஜனவரி ஊதிய உயர்வு தொடரும் என வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடுகிறது. பரந்த ஊதிய விதிகள் தொடர்பான மக்கள் வாக்கெடுப்புக்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

ChatGPT-ஐ உளவியல் ஆலோசகராகப் பயன்படுத்த வேண்டாம்

நிபுணர் மரிசா சோப் எச்சரிக்கை!

மனநல ஆலோசனைக்காகவும், தனிப்பட்ட நம்பிக்கைக்குரிய துணையாகவும் ChatGPT-ஐ பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு, மனிதர்களுக்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையிலான உறவுகளை ஆராயும் உளவியலாளர் மரிசா சோப் (Marisa Tschopp) வலியுறுத்தியுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் «Die Dargebotene Hand» உதவி அமைப்பின் இணைய அரட்டையில், மனித ஆலோசகர் கிடைக்காதபோது இரண்டு நிமிடங்களுக்குப் பின்னர் செயற்கை நுண்ணறிவு உரையாடல் கருவி பதிலளிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக. தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பான நேர்காணலில் அவர் தனது கருத்துகளைப் பகிர்ந்துள்ளார்.

உதவி தேவைப்படுபவருக்கு எந்தப் பதிலும் கிடைக்காமல் இருப்பதைவிட, உடனடியாக ஒரு பதில் கிடைப்பது தற்காலிக ஆறுதலை வழங்கக்கூடும் என அவர் குறிப்பிட்டார். எனினும், அந்த உரையாடலுக்குப் பின்னர் பயனாளரின் மனநிலை மேம்படுகிறதா அல்லது மேலும் பாதிக்கப்படுகிறதா என்பதை மதிப்பிடப் போதிய ஆய்வுத் தரவுகள் இன்னும் இல்லை என்றும் தெரிவித்தார்.

தவறான பதில்கள் அளிக்கும் அபாயம்

செயற்கை நுண்ணறிவு கருவிகள் தவறான தகவல்களை நம்பகமான பதில்கள்போல் வழங்கக்கூடும். மனநலச் சூழலில் இத்தகைய பதில்கள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதால், பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என சோப் வலியுறுத்தியுள்ளார்..

மனிதர்களைப் போன்ற இயல்பான பதில்கள், செயற்கை நுண்ணறிவின் மீது அளவுக்கு அதிகமான நம்பிக்கையையும்

சார்பையும் உருவாக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.

மனித உதவியே இலக்காக இருக்க வேண்டும்

உதவி தேவைப்படுபவர்கள் அதிகமாகவும், உதவி வழங்கக்கூடியவர்கள் குறைவாகவும் இருப்பதே அடிப்படைப் பிரச்சினை என அவர் சுட்டிக்காட்டினார். செயற்கை நுண்ணறிவு தற்காலிக இடைவெளியை நிரப்ப உதவக்கூடும் என்றாலும், மனித ஆலோசகர்களின் பற்றாக்குறையை அது தீர்க்குமா என்பதில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்தார்.

மனநலச் சேவைகளை வலுப்படுத்துவதற்கும், சிகிச்சையாளர்களைப் பயிற்றுவிப்பதற்கும் அதிக முதலீடு செய்ய வேண்டும் என்பதே தனது விருப்பம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்..

லாண்டிஸ்வில் கால்நடைக் கண்காட்சியில் Diana முதலிடம் Laura இரண்டாமிடம்!

பேர்ன் மாநிலத்தின் Landiswil கால்நடை வளர்ப்பாளர் சங்கத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கடந்த வார இறுதியில் கால்நடைக் கண்காட்சி நடைபெற்றது. இதில் ஏறத்தாழ 300 பசுக்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

கண்காட்சியின் சிறந்த பசுவுக்கான «Miss Landiswil» பட்டத்தை, Reto Beer குடும்பத்தினரின் Diana பெற்றுக்கொண்டது. Thomas Brunner குடும்பத்தினரின் Laura, இரண்டாமிடத்திற்கான «Vize-Miss Landiswil» பட்டத்தை வென்றது.

சிறந்த மடி அமைப்புக்கான «Miss Schöneu-ter» பட்டம், Martin Kobel என்பவரின் Hortensie பசுவுக்கு வழங்கப்பட்டது. இப்பிரிவில் இரண்டாமிடத்திற்கான «Vize-Miss Schöneuter» பட்டத்தை, Andreas Hofer குடும்பத்தினரின் Hillside பெற்றுக்கொண்டது.

சூரியசக்தி விமானத்தில் 9,640 மீற்றர் உயரம்:

சுவிஸ் விமானியின் உலகச் சாதனைக்கு அங்கீகாரம்!

சுவிஸ் விமானி ரஃபாயேல் டொம்ஜான் (Raphaël Domjan), சூரியசக்தியில் இயங்கும் மின்சார விமானத்தில் 9,640 மீற்றர் உயரத்தை எட்டிய உலகச் சாதனையை, சர்வதேச வான்விளையாட்டு சம்மேளனமான FAI அதிகாரபூர்வமாக அங்கீகரித்துள்ளது. 2025 ஒகஸ்ட் 12ஆம் திகதி, வலே மாநி லத்தின் சியோன் விமான நிலையத்திலிருந்து SolarStratos விமானத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயணத்தின் தரவுகள் சரிபார்க்கப்பட்ட பின்னர், 2026இல் சாதனை உறுதிப்படு த்தப்பட்டுள்ளது.

ஐந்து மணித்தியாலங்கள் ஒன்பது நிமிடங்கள் நீடித்த இந்தப் பயணத்தில், சூரியசக்தியுடன் மேல்நோக்கி எழும் வெப்பக் காற்றோட்டங்களையும் பயன்படுத்தி விமானம் உயரத்தை எட்டியது. இதன்மூலம், சூரியசக்தி விமானத்திற்கான முந்தைய 9,235 மீற்றர் உயரச் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சாதனையைப் பாராட்டி டொம்ஜானுக்கு FAI அமைப்பின் Louis Blériot பதக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

கார்பன் நாரால் உருவாக்கப்பட்ட SolarStratos விமானம் 9.6 மீற்றர் நீளமும், 24.8 மீற்றர் இறக்கை விரிப்பும் கொண்டது. அதன் இறக்கைகளில் 22 சதுர மீற்றர் பரப்பளவில் சூரிய மின்தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. புதைபடிவ எரிபொருளைப் பயன்படுத்தாமல், மனிதர் இயக்கும் சூரியசக்தி மின்சார விமானத்தில் வளிமண்டலத்தின் ஸ்ட்ராட்டோஸ்பியர் அடுக்கை அடைவதே இத்திட்டத்தின் அடுத்த இலக்காகும்.

தனிப்பட்ட தகவல்கள் கசிந்தாலும் பாதுகாப்பைக் கைவிடாதீர்கள்:

தரவுப் பாதுகாப்பு ஆய்வாளர் வலியுறுத்தல்!

சுவிட்சர்லாந்தில் நிறுவனங்கள் மீதான சைபர் தாக்குதல்கள் தொடர்பான கவலை அதிகரித்துள்ள நிலையில், "எமது தகவல்கள் ஏற்கெனவே கசிந்துவிட்டன; இனிப் பாதுகாப்பதால் என்ன பயன்?" என்ற மனநிலைக்கு மக்கள் தள்ளப்படக்கூடாது என சூரிச் பல்கலைக்கழகத்தில் தனியுரிமை குறித்து ஆய்வு செய்யும் Lukas Hess வலியுறுத்தியுள்ளார்.

Ricardo, கூட்டாட்சி ஓய்வூதிய நிதி மற்றும் «Republik» உள்ளிட்ட நிறுவனங்கள் தொடர்பான சைபர் தாக்குதல்களை மையமாகக் கொண்ட நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அனைத்துத் தகவல்களும் ஒரே அளவிலானவை அல்ல

மின்னஞ்சல் முகவரி அல்லது வீட்டு முகவரி வெளியானதால், ஏனைய தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதை நிறுத்திவிடக்கூடாது. மருத்துவ மற்றும் நிதித் தகவல்கள் போன்றவற்றின் கசிவு மேலும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என அவர் சுட்டிக்காட்டினார்.

திருடப்பட்ட தகவல்கள், பணம் மற்றும் உள்நுழைவு விவரங்களைப் பறிக்கும் மோசடிகளுக்கும், மிரட்டல் மற்றும் பணப்பறிப்புக்கும் பயன்படுத்தப்படலாம் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

சுவிசின் இணைய விற்பனையில் Galaxus முதலிடம்

நான்காவது இடத்தில் Temu!

சுவிட்சர்லாந்தில் 2025ஆம் ஆண்டு அதிக இணைய விற்பனை வருவாய் ஈட்டிய நிறுவனங்களின் தரவரிசையில் Galaxus முதலிடத்தைப் பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து Zalando, Digitec, Temu ஆகியவை இடம்பெற்றுள்ளன.

ஆலோசனை நிறுவனமான Carpathia வெளியிட்ட தரவரிசையின்படி, Galaxus சுமார் 230 கோடி பிராங்குகளும், Zalando 182 கோடி பிராங்குகளும் இணைய விற்பனை வருவாயாகப் பதிவு செய்துள்ளன.

சூரிச் Hardplatz கலவரம்: பொதுமக்களிடம் புகைப்படங்கள், வீடியோக்களைக் கோரும் பொலிஸார்!

சூரிச்சின் Hardplatz பகுதியில் ஒக்டோபர் 10ஆம் திகதி இரவு முதல் 11ஆம் திகதி அதிகாலை வரை இடம்பெற்ற கலவரம் தொடர்பாக, பொதுமக்கள் எடுத்த புகைப்படங்கள் மற்றும் வீடியோப் பதிவுகளைச் சமர்ப்பிக்குமாறு சூரிச் நகரப் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பவத்தால் ஏற்பட்ட சொத்துச் சேதத்தின் மதிப்பு தற்போது பல இலட்சம் பிராங்குகளாக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

சம்பவங்களின் முழுமையான நிகழ்வுவரிசையை மீளமைக்கவும், குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படுபவர்களை அடையாளம் காணவும் இந்தப் பதிவுகள் உதவும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலவரத்தின்போது எடுக்கப்பட்ட பதிவுகள் மட்டுமன்றி, அதற்கு முன்னரும் பின்னரும் அப்பகுதியில் எடுக்கப்பட்ட படங்கள் மற்றும் வீடியோக்களும் தேவைப்படுகின்றன.

பொலிஸார் ஏற்படுத்தியுள்ள பதிவேற்ற வசதியூடாகக் கோப்புகளை அனுப்பலாம். பெயர் அல்லது தொடர்பு விவரங்களை வழங்குவது கட்டாயமில்லை.

முடிந்தவரை திருத்தப்படாத அசல் கோப்புகளுடன், அவை எடுக்கப்பட்ட இடம் மற்றும் நேரம் குறித்த தகவல்களையும் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்படும் பதிவுகள், சட்ட விதிகளுக்கு அமைவாக விசாரணை அதிகாரிகள் மற்றும் நீதிமன்றங்களால் ஆய்வு செய்யப்பட்டு, ஆதாரங்களாகப் பயன்படுத்தப்படலாம்.

ஐரோப்பிய ஒன்றிய விமானப் பயணிகள் உரிமைகளில் மாற்றம்: கைப்பொதி, மாற்றுப் பயணம் மற்றும் இழப்பீட்டில் கூடுதல் பாதுகாப்பு!

விமானப் பயணிகளின் உரிமைகளை வலுப்படுத்தும் புதிய விதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் இறுதி ஒப்புதல் வழங்கியுள்ளது. பயணக் கட்டணத் தெளிவு, விமான ரத்து மற்றும் தாமதத்தின்போது உதவி, மாற்றுப் பயண ஏற்பாடுகள் உள்ளிட்டவற்றில் பாதுகாப்பை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். புதிய நடைமுறைகள் 2027ஆம் ஆண்டில் பயன்பாட்டுக்கு வரவுள்ளன.

பயணிகளுக்கான முக்கிய மாற்றங்கள்:

• கட்டணத்தில் தெளிவு: முன்பதிவு தொடங்குவதற்கு முன்னரே, கைப்பொதி அனுமதியை உள்ளடக்கிய பயணக் கட்டணம் காட்டப்பட வேண்டும்.

• குடும்பத்தினருக்கு அருகருகே இருக்கைகள்: குடும்பத்தினரும், உதவி தேவைப்படும் பயணிகளும் அவர்களுடன் பயணிப்பவர்களும் கூடுதல் கட்டணமின்றி அருகருகே அமர்வதற்கான பாதுகாப்பு வலுப்படுத்தப்படுகிறது.

• மாற்றுப் பயண உரிமை: விமான ரத்து அல்லது ஏற்ற மறுப்புக்குப் பின்னர், பொருந்தும் நிபந்தனைகளின்படி மூன்று மணிநேரத்திற்குள் மாற்றுப் பயண வாய்ப்பு வழங்கப்படாவிட்டால், பயணியே ஏற்பாடு செய்து அசல் கட்டணத்தின் 400 சதவீதம் வரை செலவுத் திருப்பிச் செலுத்தலைக் கோரலாம். இது தானாகக் கிடைக்கும் இழப்பீட்டுத் தொகையல்ல.

• காத்திருப்பின்போது உதவி: இரண்டு மணிநேரத்திற்கு ஒருமுறை சிற்றுண்டி அல்லது பானங்கள், மூன்று மணிநேரத்திற்குப் பின்னர் உணவு, இணைய வசதி மற்றும் இரண்டு தொலைபேசி அழைப்புகள் வழங்கப்பட வேண்டும். தேவைப்படும் இரவுத் தங்குமிடமும் போக்குவரத்தும் இலவசமாக ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

பணத்தைத் திரும்பப் பெறுவதில் முக்கிய விளக்கம்

பொருந்தும் சூழலில், பயணத்தைத் தொடராமல் பணத்தைத் திரும்பப் பெறுவதைப் பயணி தெரிவுசெய்தால், அந்தத் தெரிவிலிருந்து ஏழு நாட்களுக்குள் உரிய தொகை திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். விமானம் தாமதமானதும் அனைவருக்கும் தானாக முழுப் பணமும் திரும்பக் கிடைக்கும் என்று பொருளல்ல.

டிக்கெட்டில் பெயரின் எழுத்துப் பிழையைத் திருத்த, புறப்படுவதற்கு குறைந்தது 48 மணிநேரத்திற்கு முன்னர் கோரிக்கை விடுத்தால், குறைந்தது ஒருமுறை இலவசமாகத் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

பிரான்ஸ் — உக்ரைன் உறவில் வலுக்கும் முரண்பாடு! மரின் லு பென் எச்சரிக்கை- ஜெலன்ஸ்கி பதிலடி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

(பிரான்சின் வலதுசாரித் தலைவரான மரின் லு பென், தான் ஆட்சிக்கு வந்தால் உக்ரைனுக்கான நிதியுதவியை நிறுத்தப்போவதாக வெளியிட்ட கருத்தும், அதற்கு உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி அளித்த கடுமையான பதிலும் புதிய சர்ச்சையை உருவாக்கியுள்ளன)

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், உக்ரைனுக்கு மேற்கத்திய நாடுகள் வழங்கிவரும் இராணுவ மற்றும் நிதியுதவிகள் ஐரோப்பிய அரசியலில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தச் சூழலில், பிரான்சின் வலதுசாரித் தலைவரான மரின் லு பென், தான் ஆட்சிக்கு வந்தால் உக்ரைனுக்கான நிதியுதவியை நிறுத்தப்போவதாக வெளியிட்ட கருத்தும், அதற்கு உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி அளித்த கடுமையான பதிலும் புதிய சர்ச்சையை உருவாக்கியுள்ளன.

இது இரு தலைவர்களுக்கிடையிலான கருத்து மோதல் மட்டுமல்ல. ஐரோப்பாவின் பாதுகாப்பு, பொருளாதாரச் சுமை, ஆயுதத் தொழில்துறையின் எதிர்காலம் மற்றும் உக்ரைனின் இறையாண்மை ஆகியவற்றைச்

சுற்றியுள்ள முக்கியமான அரசியல் கேள்விகளையும் இந்த விவகாரம் முன்னிறுத்துகிறது.

மரின் லு பென் எச்சரிக்கை

மரின் லு பென்னின் எச்சரிக்கையாக, உக்ரைனுக்கு இனி உதவி கிடைக்காது என்று தெரிவித்துள்ளதால் இரு நாடுகளுக்கும் இடையே சர்ச்சை ஏற்பட்டுள்ளது. 2027ஆம் ஆண்டு பிரான்ஸ் அதிபர் தேர்தலை முன்னிட்டு, மரின் லு பென் உக்ரைனுக்கான நிதியுதவி தொடர்பாகக் கடுமையான நிலைப்பாட்டை முன்வைத்துள்ளார். தான் ஆட்சிக்கு வந்தால் ஆரம்பத்தில் ஆறு மாதங்களுக்கு மட்டுமே உதவி வழங்கப்படும் என்றும், அதன் பின்னர் நிதியுதவி நிறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

பிரான்ஸ் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகள், அரசாங்கத்தின் கடன் சுமை மற்றும் மக்களின் வாழ்க்கைச் செலவுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, வெளிநாட்டுப் போருக்காகத் தொடர்ந்து பெருமளவு நிதி செலவிடுவது நியாயமானதா என்பதே அவரது வாதத்தின் அடிப்படையாகும்.

இந்த நிலைப்பாடு பிரான்சின் உள்நாட்டு அரசியலில் ஆதரவைப் பெறக்கூடும். வேலைவாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் பொதுச் செலவுகள் தொடர்பாகக் கவலைப்படும் மக்களிடம் இத்தகைய கருத்துகள் செல்வாக்குச் செலுத்தலாம். ஆனால், உக்ரைனுக்கான உதவியை நிறுத்துவது என்பது வெறுமனே நிதிச் செலவைக் குறைக்கும் நடவடிக்கை அல்ல. ஐரோப்பியப் பாதுகாப்பில் பிரான்ஸ் வகிக்கும் பங்கையும் அது பாதிக்கக்கூடும்.

ஜெலன்ஸ்கியின் பதிலடி

ஜெலன்ஸ்கியின் பதிலடியாக, உதவி என்பது ஒருவழிப் பாதையல்ல என்று அவர் தெரிவித்துள்ளார். மரின் லு பென்னின் கருத்துக்குப் பதிலளித்த ஜெலன்ஸ்கி, உக்ரைனுக்கு உதவுவது பிரான்சுக்கு நன்மையற்ற செலவு என்ற பார்வையைச் சவாலுக்கு உட்படுத்தியுள்ளார். ரஷ்யாவுடனான போரில் உக்ரைன் பெற்றுள்ள இராணுவ அனுபவம் ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்குப் பயன்படும் என்பது அவரது வாதமாகும்.

ஏவுகணைத் தாக்குதல்கள், ஆளில்லா விமானங்களின் பயன்பாடு, மின்னணுப் போர் மற்றும் வான்வழிப் பாதுகாப்பு போன்ற துறைகளில் உக்ரைன் நேரடியாகப் போர்க்கள அனுபவத்தைப் பெற்றுள்ளது. எந்த ஆயுதங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன, அவற்றில் என்ன குறைபாடுகள் உள்ளன, எதிரியின் தாக்குதல்களை எவ்வாறு எதிர்கொள்ளலாம் போன்ற தகவல்கள் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயனளிக்கக்கூடும்.

இதன் மூலம் ஆயுத அமைப்புகளை மேம்படுத்தவும், புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கவும், எதிர்காலப் போர்களுக்குத் தயாராகவும் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன.

எனவே, உக்ரைனுக்கு வழங்கப்படும் உதவி என்பது பணத்தைச் செலவிடும்

நடவடிக்கை மட்டுமல்ல; பாதுகாப்புத் தொழில்நுட்பம், கூட்டு உற்பத்தி மற்றும் இராணுவ ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கான முதலீடாகவும் அமையலாம் என்பதே ஜெலன்ஸ்கியின் கருத்து.

ஆயுத விற்பனை வாய்ப்புகள்

பிரான்ஸ் ஐரோப்பாவின் முக்கியமான ஆயுத உற்பத்தி நாடுகளில் ஒன்றாகும். போர் விமானங்கள், ஏவுகணைகள், ரேடார் மற்றும் வான்வழிப் பாதுகாப்பு அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அந்நாடு வலுவான தொழில்நுட்பத் திறனைக் கொண்டுள்ளது.

உக்ரைனுக்கான ஆயுத உதவிகள், அவற்றின் பராமரிப்பு, பயிற்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவை பிரான்சின் பாதுகாப்புத் துறைக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குகின்றன. பிரான்ஸ் மற்றும் இத்தாலி இணைந்து உருவாக்கிய SAMP/T வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு இதற்கு ஓர் உதாரணமாகும். உக்ரைனின் போர்க்கள அனுபவம் இத்தகைய அமைப்புகளின் செயல்திறனை மதிப்பிடவும், எதிர்கால மேம்பாடுகளுக்கான தேவைகளை அடையாளம் காணவும் உதவக்கூடும்.

இருப்பினும், ஆயுதத் தொழில்துறைக்கு கிடைக்கும் வருமானத்தையும் உக்ரை னுக்கான உதவிகளின் மொத்தச் செலவையும் ஒன்றாகக் கருத முடியாது. இராணுவ உதவிகளில் நன்கொடைகள், உபகரணங்கள், பயிற்சி மற்றும் பிற நிதி ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஆகவே, இந்த உதவிகள் பிரான்சுக்கு முழுமையான பொருளாதார இலாபத்தைத் தருகின்றன என்று கூறுவதும் மிகைப்படுத்தலாகும்.

ஐரோப்பியப் பாதுகாப்பில் உக்ரைனின் பங்கு

2022 பெப்ரவரி 24ஆம் தேதி ரஷ்யா முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கியதிலிருந்து, ஐரோப்பியப் பாதுகாப்பு விவாதத்தில் உக்ரைன் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

ரஷ்யா உக்ரைனில் தனது இராணுவ நோக்கங்களை அடைந்தால், கிழக்கு ஐரோப்பாவின் பாதுகாப்புச் சூழல் மேலும் சிக்கலடையலாம் என்ற அச்சம் பல ஐரோப்பிய நாடுகளிடம் காணப்படுகிறது. எனவே, உக்ரைனுக்கு வழங்கப்படும் உதவியை அதன் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையாக மட்டுமல்லாமல், ஐரோப்பாவின் சக்திச்

சமநிலையைப் பேணுவதற்கான முயற்சியாகவும் சில அரசாங்கங்கள் பார்க்கின்றன.

ஆனால், உக்ரைன் ஐரோப்பாவிற்கான பாதுகாப்புக் கேடயமாக இருக்கிறது என்ற வாதத்தின் பெயரில் அந்நாட்டு மக்களின் உயிரிழப்புகளை இயல்பான செலவாகக் கருத முடியாது. இராணுவ உதவிகளுடன் போரை முடிவுக்குக் கொண்டுவரும் இராஜதந்திர முயற்சிகளும் அவசியமானவை.

பிரான்ஸ் உதவி நிறுத்தம்?

உக்ரைனுக்கான பிரான்சின் உதவி தொடர்பாக 27 பில்லியன் யூரோக்கள் என்ற தொகை குறிப்பிடப்படுகிறது. இதில் நேரடி உதவியாக 7.9 பில்லியன் யூரோக்களும், ஐரோப்பிய ஒன்றியத்தின் வழியாக 19 பில்லியன் யூரோக்களும் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எனினும், இத்தகைய புள்ளிவிவரங்களை மதிப்பிடும்போது அவற்றின் காலவரம்பையும் கணக்கீட்டு முறையையும் தெளிவுபடுத்த வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் மொத்த உதவியை பிரான்ஸ் தனியாக வழங்கிய தொகையாகக் கருத முடியாது. இருதரப்பு உதவிகளும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுநிதி வழியாக வழங்கப்படும் ஆதரவும் வெவ்வேறானவை.

எனவே, உதவிகளின் உண்மையான அளவு, செலவுகள் மற்றும் விளைவுகள் குறித்து வெளிப்படைத்தன்மை அவசியமாகிறது. மக்களின் வரிப்பணம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதற்குப் பிரான்ஸ் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்.

2027ஆம் ஆண்டு பிரான்ஸ் அதிபர் தேர்தல் உக்ரைனுக்கான உதவிகளின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக்கூடிய முக்கியமான அரசியல் நிகழ்வாக அமையலாம். மரின் லு பென் ஆட்சிக்கு வந்தால் உதவிகளைக் குறைக்க முயலலாம். ஆனால், தேர்தல் வாக்குறுதி மட்டுமே அரசின் இறுதிக் கொள்கையைத் தீர்மானிக்காது; நாடாளுமன்றம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களும் இதில் தாக்கம் செலுத்தும்.

பழைய Battery-களை வீட்டுக் குப்பையில் வீசாதீர்கள்!

தீ விபத்து ஏற்படும் அபாயம்

சுவிட்சர்லாந்தில் பயன்படுத்தி முடிந்த Battery-களை சாதாரண வீட்டுக் குப்பைகளுடன் வீசுவது தடைசெய்யப்பட்டுள்ளது. குறிப்பாக Lithium-ion Battery-கள் சேதமடையும்போதோ, குப்பை வண்டிகளில் நசுக்கப்படும்போதோ அதிக வெப்பமடைந்து தீப்பற்றும் அபாயம் உள்ளது.

இதனால் பழைய Battery-களைத் தனியாகச் சேகரித்து, உரிய சேகரிப்பு நிலையங்களில் ஒப்படைக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

நாடு முழுவதும் 11,000-க்கும் அதிகமான சேகரிப்பு இடங்கள்!

சுவிட்சர்லாந்தில் பழைய Battery-களைச் சேகரிப்பதற்காக 11,000-க்கும் அதிகமான இடங்கள் உள்ளன.

AA, AAA, பொத்தான் Battery, Rechargeable Battery மற்றும் Lithium-ion Battery உள்ளிட்டவற்றை Battery விற்பனை செய்யும் கடைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட சேகரிப்பு நிலையங்களிலும் இலவசமாக ஒப்படைக்கலாம்.

இதற்காகப் புதிய Battery வாங்க வேண்டிய அவசியமில்லை.

இலவசமாக ஒப்படைக்க முடிவது எப்படி?

சுவிட்சர்லாந்தில் Battery வாங்கும்போதே அதன் விலையில் முன்கூட்டிய அகற்றல் கட்டணம் (VEG) சேர்க்கப்படுகிறது.

இந்தக் கட்டணம் பழைய Battery-களைச் சேகரித்தல், போக்குவரத்து செய்தல் மற்றும் மறுசுழற்சி செய்தல் ஆகிய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

Battery-களில் உள்ள Lithium, Nickel, Copper, Zinc போன்ற மதிப்புமிக்க மூலப்பொருட்களையும் மறுசுழற்சி மூலம் மீட்டெடுக்க முடியும்.

பொதுமக்கள் கவனிக்க வேண்டியவை

பழைய Battery-களை வீட்டுக் குப்பையில் வீச வேண்டாம்.

பயன்படுத்திய Battery-களைப் பாதுகாப்பாகத் தனியாகச் சேகரிக்கவும்.

அருகிலுள்ள Battery விற்பனை நிலையங்களில் இலவசமாக ஒப்படைக்கவும்.

Battery அகற்ற முடியாத கைப்பேசி மற்றும் பிற மின்னணுச் சாதனங்களை உரிய மின்னணுக் கழிவு சேகரிப்பு நிலையங்களில் ஒப்படைக்கவும்.

சிறிய Battery ஒன்றைச் சரியான முறையில் அகற்றுவதன் மூலம் தீ விபத்து அபாயத்தைக் குறைப்பதுடன், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் முடியும்.

நகரம் முழுவதும் மூடுபனி... மலையில் மட்டும் வெயில்! ஏன்?

சுவிட்சர்லாந்தில் இலையுதிர் மற்றும் குளிர்காலங்களில் சூரிச் உள்ளிட்ட தாழ்வான பகுதிகள் அடர்ந்த மூடுபனியால் சூழப்பட்டிருக்கும்போது, அருகிலுள்ள மலை உச்சிகளில் பிரகாசமான வெயில் காணப்படுவது வழக்கமான வானிலை நிகழ்வாகும்.

இதற்குக் காரணம் என்ன?

பொதுவாக உயரத்திற்குச் செல்லச் செல்ல காற்றின் வெப்பநிலை குறையும். ஆனால் சில நாட்களில் தரைக்கு அருகே குளிரான காற்றும், மேலே வெப்பமான காற்றும் காணப்படும். இதனை வெப்பநிலைத் தலைகீழாக்கம் (Temperature Inversion) என அழைக்கின்றனர்.

இரவு நேரங்களில் நிலம் வெப்பத்தை இழப்பதால் தரைக்கு அருகிலுள்ள காற்று குளிரடைகிறது. இந்தக் குளிரான காற்று ஆல்ப்ஸ் மற்றும் ஜூரா மலைகளுக்கு இடையிலுள்ள சுவிஸ் சமவெளிப் பகுதிகளில் தேங்குகிறது.

காற்றிலுள்ள நீராவி சிறிய நீர்த்துளிகளாக மாறுவதால் மூடுபனி உருவாகிறது.

மலையில் மட்டும் வெயில் ஏன்?

மூடுபனிப் படலத்திற்கு மேலே அமைந்துள்ள மலை உச்சிகளில் தெளிவான வானமும் வெயிலும் காணப்படலாம். கீழே பரந்திருக்கும் வெண்மையான மூடுபனிக் காட்சி ஜெர்மன் மொழியில் Nebelmeer (மூடுபனிக் கடல்) என அழைக்கப்படுகிறது.

சுவிஸ் சமவெளிப் பகுதிகளில் குறிப்பாக நவம்பர், டிசம்பர் மாதங்களில் இத்தகைய மூடுபனி அதிகம் காணப்படுகிறது. சில நேரங்களில் பல நாட்கள் நீடிக்கவும் வாய்ப்புள்ளது.

காற்று மாசுபாடும் அதிகரிக்கலாம்!

வெப்பநிலைத் தலைகீழாக்கம் ஏற்படும் காலங்களில் கீழ்மட்டக் காற்று மேலே கலப்பது குறைவதால், காற்று மாசுத்துகள்கள் தரைக்கு அருகே தேங்கக்கூடும்.

மேலும், மூடுபனி நிலவும் நேரங்களில் வாகன ஓட்டுநர்கள் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பான இடைவெளியைப் பேணுவது அவசியமாகும்.

எனவே, நகரத்தில் மூடுபனி காணப்பட்டாலும் மலை உச்சியில் வெயில் இருக்கலாம். மலைப் பயணத்திற்கு முன் வானிலை முன்னறிவிப்பைச் சரிபார்ப்பது பயனுள்ளதாக இருக்கும்.

பசில் பெர்னாண்டோ:

உயர்குடியினரின் ஆதிக்கத்திலிருந்த சட்டத்தை மக்கள் உரிமைக்கான ஆயுதமாக மாற்றிய மனித உரிமைப் போராளி

உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் புகழ்பெற்ற மனித உரிமைச் செயற்பாட்டாளரும், மூத்த சட்டத்தரணியும் ஹொங்கொங்கைத் தலைமையகமாகக் கொண்ட ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளருமான பசில் பெர்னாண்டோ தனது வாழ்வுப் பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

மனித உரிமைகள் மற்றும் சட்டத் தொழில்துறையில் அவர் மேற்கொண்ட தலையீடுகள் காரணமாகவே 1980களின் இறுதிப் பகுதியில் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். அதன் பின்னர், தனது மனிதநேயச் செயற்பாடுகளை மேலும் தீவிரமாகவும் பரந்த துறைகளிலும் விரிவுபடுத்திய அவர், இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச அளவிலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பணியாற்றினார். மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் எந்தவொரு வகையான எல்லைகளோ அல்லது கருத்தியல் வேறுபாடுகளோ செல்லுபடியாகாது என்பதை அவர் தனது செயற்பாடுகள் மூலம் எடுத்துக்காட்டினார். எனக்குத் தெரிந்தவரையில், ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளராகப் பதவியேற்ற பின்னரே மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர் தீவிரமாகவும் இடைவிடாத போராட்டத்திலும் ஈடுபட்டார். அதற்கு முன்னரும் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து சர்வதேச குற்றவியல் துறையில் அரசுத் தரப்பு சட்டத்தரணியா பணியாற்றியிருந்தாலும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மேலும் விரிவான முறையிலும் புதிய அணுகுமுறைகள் மற்றும் கருத்தாக்கங்களின் அடிப்படையிலும் அவர் செயற்பட்டது ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தலைமை தாங்கிய காலத்திலேயே ஆகும்.

நிபந்தனையற்ற சட்டப் போராளி

சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ ஒரு நிபந்தனையற்ற சட்டப் போராளியாவார். மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்பது சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதே என நம்பிய அவர், தனது அறிவு, நேரம் மற்றும் சிந்தனை ஆகியவற்றை ஆசியப் பிராந்தியத்தின் பல நாடுகளில் வாழும் குரலற்ற மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணித்தார்.

எந்தவொரு தனிப்பட்ட நன்மையையோ அல்லது குறைந்தபட்சம் பாராட்டையோ எதிர்பார்க்காமல், இரவு பகலாக இதற்காக உழைத்தார்.

இந்தியா, மியன்மார், தாய்லாந்து, இலங்கை, பங்களாதேசம், பாகிஸ்தான், நேபாளம் உள்ளிட்ட பல நாடுகளில் அரச அடக்குமுறைகளால் பாதிக்கப்பட்டு, மனித உரிமைகள், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், தனிநபர் உரிமைகள் ஆகியவற்றை இழந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவரது தலைமையிலும் வழிகாட்டுதலிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் எண்ணிலடங்காதவை. அவர் தனிப்பட்ட முறையில் மேற்கொண்ட விசாரணைகள், வழங்கிய சட்ட ஆலோசனைகள் மற்றும் நிதி உதவிகள் தொடர்பான சம்பவங்களின் எண்ணிக்கையும் அதே அளவுக்கு அதிகமானதாகும்.

எனக்குத் தெரிந்தவரையில், மற்றவர்களால் செய்ய முடியாத அல்லது செய்ய எவரும் முயற்சிக்காத பல விடயங்களை எவ்விதத் தயக்கமுமின்றி நடைமுறைப்படுத்த முயன்றவர் சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ ஆவார். சட்டம் மற்றும் மனித உரிமைகள் துறைகளில் அவர் மேற்கொண்ட பரிசோதனைகள் மற்றும் நடைமுறைச் செயற்பாடுகளின் பலன்களை இன்றும் பலர் அனுபவித்து வருகின்றனர் என்று கூறுவது மிகைப்படுத்தலாகாது.

சட்டத்தரணி பசில் பெர்னாண்டோவின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருந்த, அவருக்கே உரித்தான பல பண்புகளில் மிக முக்கியமானது, எந்தவொரு சம்பவத்தையும் புதிய கோணத்தில் பார்ப்பதற்கும், சிந்திப்பதற்கும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மற்றவர்கள் பயன்படுத்தாத வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கும் அவர் கொண்டிருந்த தனித்துவமான திறமையாகும். சட்டப் பணிகளில் அது சவாலானதும் ஆபத்தானதுமான செயலாக இருந்தபோதிலும், அந்தச் சவால்களையும் ஆபத்துகளையும் ஏற்றுக்கொள்ள அவர் எப்போதும் தயாராக இருந்தார்.

அதேபோன்று, மனித உரிமைகள் துறையில் பொதுமக்களின் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலிருந்து சட்டப் போராட்டங்கள் நடைபெறும் நீதிமன்றச் செயற்பாடுகள் வரை பல்வேறு வழிகளில் அவர் தனது பணிகளை முன்னெடுத்தார்.

எளிமையான மனிதரின் சிறந்த சட்ட அறிவு

சட்ட அறிவைக் கொண்ட இரண்டாம் நிலைத் தலைமுறையினரை உருவாக்குவதற்காக அவர் ஆற்றிய பங்களிப்பும் அளப்பரியது. இன்று பலரால் கவனிக்கப்படாத விடயமாக இது மாறியிருந்தாலும், 2000 களின் ஆரம்பப் பகுதியிலும் அதன் பின்னரும் சட்டத்தரணி பசில் பெர்னாண்டோவின் வழிகாட்டுதல்களாலும் ஆலோசனைகளாலும் தமது அறிவை விரிவுபடுத்திக்கொண்டவர்கள் எத்தனை பேர் என்பதை நான் நன்கு அறிவேன்.

இன்று ஊடகச் சந்திப்புகளை நடத்தி சட்டம் தொடர்பாக உரையாற்றும் பல சட்டத்தரணிகளின் உண்மையான ஆரம்பகால ஆசான் வேறு யாருமல்ல; சட்டத்தரணி பசில் பெர்னாண்டோவே ஆவார். அந்தச் சட்டத்தரணிகளின் பெயர்களை நான் குறிப்பிடாவிட்டாலும், பசில் பெர்னாண்டோ அமைதியாக ஆற்றிய பணியைப் பாராட்டும் வகையில் அவர் மேற்கொண்ட பணிகளைச் சுருக்கமாகவேனும் பதிவு செய்ய வேண்டியுள்ளது.

சித்திரவதை, சிறுவர் பாலியல் வன்முறை போன்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான சட்டத் தலையீடுகளின்போது, அவற்றுக்கெனத் தயாரிக்கப்படும் சட்ட ஆவணங்களில் தனிச்சிறப்புடைய விடயங்கள் இடம்பெற வேண்டும். இதனைச் செய்வதற்கு சட்ட அறிவுடன் மட்டுமன்றி, இத்தகைய விடயங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் எவ்வாறான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதிலும் தொழில்முறை அனுபவம் இருக்க வேண்டும்.

மேற்கூறியவாறு, சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ பாரம்பரிய சட்ட மற்றும் நீதிமன்றப் பணிகளுக்கு அப்பால் சிந்தித்துச் செயற்பட்டவர். அதனாலேயே அவர் தெரிவுசெய்த வழிமுறைகள் மாற்று அணுகுமுறைகளாலும் பரிசோதனை முயற்சிகளாலும் நிறைந்திருந்தன. சில இளம் சட்டத்தரணிகள் இத்தகைய முயற்சிகளுக்கு அஞ்சியதுடன், அவை தமது தொழில்முறை எதிர்காலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்

என்றும் இரகசியமாகக் கிசுகிசுத்தனர்.

ஆனால், மூத்த சட்டத்தரணியும் சர்வதேச அளவில் புதிய சட்டத் துறைகள் தொடர்பாக ஆழ்ந்த அறிவைக் கொண்டவருமான பசில் பெர்னாண்டோவுக்கு சவால் விடுக்கவோ, அவரது கருத்துகளைத் தாண்டிச் செல்லவோ அவர்களில் எவராலும் முடியவில்லை. உண்மையில், அவரது பெறுமதியான ஆலோசனைகள், சட்ட ஆவணங்களைத் தயாரிக்கும் உத்திகள் மற்றும் விடயங்களைத் தொகுத்து முன்வைக்கும் இயல்பான திறமை ஆகியவற்றின் மூலம் பல சட்டத்தரணிகள் பின்னர் பெரும் பயன்களைப் பெற்றனர் என்பது உண்மையாகும்.

சில வழக்குகளில், சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ தனது இளம் சட்டத்தரணிகளுக்கு மணித்தியாலக் கணக்கில் மட்டுமன்றி, அரைநாள் முழுவதும் உழைத்து ஆலோசனைகளை வழங்கினார். குறிப்பாக, சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளில் தயாரிக்க வேண்டிய சத்தியப்பிரமாணங்கள், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய ஏனைய அறிக்கைகள் மற்றும் சட்ட ஆவணங்கள், அதேபோன்று அடிப்படை உரிமை வழக்குகளுக்காகத் தயாரிக்க வேண்டிய மனுக்கள் மற்றும் சத்தியப்பிரமாணங்கள் ஆகியவற்றைச் சரியாகத் தயாரிப்பதற்கு அவர் எவ்வளவு நேரத்தையும் உழைப்பையும் அர்ப்பணித்தார் என்பதை நான் ஒன்றிரண்டு தடவைகள் மட்டுமல்ல, பலமுறை நேரில் கண்டிருக்கிறேன்.

ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவில் உள்ள ஹொங்கொங்கிலிருந்து தொலைபேசி மூலம் இலங்கையிலிருந்த சட்டத்தரணிகளுடன் தொடர்புகொண்டு, அந்த ஆவணங்களை எழுத்துக்கு எழுத்து எவ்வாறு ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதையும், அவற்றுக்கு எத்தகைய சட்ட வாதங்களைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதையும் அவர் மிகுந்த பொறுமையுடனும் நிதானத்துடனும் விளக்கியதை நான் அறிவேன். ஏனெனில், அத்தகைய பல சந்தர்ப்பங்களில், அப்போது இளம் வயதிலிருந்த என்னைப் போன்ற செயற்பாட்டாளர்களையும் அந்தப் பணிகளில் இணைத்துக்கொள்ளும் அளவுக்கு அவர் பணிவும் கருணையும் கொண்டவராக இருந்தார்.

இத்தகைய சிறப்பு வழக்குகளை நீதிமன்றத்தில் முன்னெடுத்த சில சட்டத்தரணிகள் தமது விருப்பத்திற்கேற்ப தயாரித்த பல ஆவணங்களைச் சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ ஒதுக்கிவிட்டு, அனைத்தையும் மீண்டும் ஆரம்பத்திலிருந்து சரியாக ஆவணப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

இத்தகைய செயற்பாடுகள் ஒரு சட்டத்தரணிக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தலாம் அல்லது அவரது தொழில்முறை கௌரவத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகத் தோன்றலாம். வெளிப்பார்வையில், பசில் பெர்னாண்டோ தனது அதிகார வரம்பை மீறிச் செயற்படுவதாகவும் சிலருக்குத் தோன்றியிருக்கலாம். ஆனால், அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர் நடந்துகொண்ட கருணையான மற்றும் தொழில்முறை முதிர்ச்சியுடைய விதத்தைப் பார்க்கும்போது, உண்மையில் அது அவ்வாறல்ல என்பதை

எமது அனுபவத்தின் மூலம் அறிந்துகொண்டோம்.

தனது இளம் சட்டத்தரணியைத் தொழில்முறையில் சங்கடப்படுத்துவதோ அல்லது அவருக்கு எதுவும் தெரியாது என்று சித்தரிப்பதோ பசில் பெர்னாண்டோவின் நோக்கமாக இருக்கவில்லை. அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்ட அந்த வழக்கில் பாதிக்கப்பட்டவருக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காகச் சிறந்ததும் மிகச் சரியானதுமான நடவடிக்கையை மேற்கொள்வதே அவரது நோக்கமாக இருந்தது.

எதிர்த்தரப்பினரால் சட்டரீதியாகச் சவால் செய்ய முடியாத உயர்தரமான ஆவணங்களைத் தயாரிப்பதும், வலுவான வாதங்களைக் கட்டியெழுப்புவதும், சாட்சியங்களைச் சேகரித்துப் பாதுகாப்பதும் அவரது நோக்கங்களாக இருந்தன. மேலும், பசில் பெர்னாண்டோவின் வழிகாட்டுதலின் கீழ் இத்தகைய ஆவணங்களைத் தயாரித்ததன் மூலம் ஏனைய சட்டத்தரணிகளும் தமது அறிவையும் தொழில்முறை அனுபவத்தையும் மேம்படுத்திக்கொண்டனர் என்பதை நான் நன்கு அறிவேன்.

சர்வதேச அனுபவங்களைத் தாய்நாட்டுக்குக் கொண்டுவந்தவர்

சர்வதேச அளவில் குற்றவியல் துறையில் அரசுத் தரப்பு சட்டத்தரணியாக நீண்டகாலம் பணியாற்றிய அவர், தனது அனுபவங்களையும் துறைசார் அறிவையும் இலங்கையிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் இத்தகைய வழக்குகளுக்காகத் தாராளமாகப் பகிர்ந்துகொண்டார் என்பது அவருடன் நெருக்கமாகப் பழகிய எம்மில் பலர் அறிந்த விடயமாகும்.

குறிப்பாக, 2000களில் இலங்கையில் தொற்றுநோய்போல் பரவிய பொலிஸ் சித்திரவதைகள், காவலில் இடம்பெற்ற மரணங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான வன்முறைகள் தொடர்பான வழக்குகளில் அவர் பல சிறப்பு வழிமுறைகளைப் பயன்படுத்தினார். பாதிக்கப்பட்டவருக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதும், சட்டரீதியான, வைத்திய ரீதியான மற்றும் ஏனைய சூழ்நிலைச் சான்றுகளை உருவாக்குவதற்கான எழுத்துப்பூர்வமான ஆவணங்களை விரைவாகத் தொகுப்பதும் அவற்றில் முக்கியமானவையாக இருந்தன.

இவை அனைத்திலும் மிகவும் முக்கியமானதும் புரட்சிகரமானதுமான விடயம், அதுவரை நிலவிய சட்டக் கருத்தாக்கத்துக்கு சவால் விடுக்கும் வகையில் குற்றவியல் வழக்குகளில் சிவில் தரப்பினரும் தலையீடு செய்ய முடியும் என்ற கருத்தை முன்வைத்து அவர் நடத்திய சிந்தனைப் போராட்டமாகும்.

அந்தக் காலத்தில் இது எம்மில் பலரை வியப்பில் ஆழ்த்தியிருந்தாலும், அவர் வழக்கமான புன்னகையுடனும் தகர்க்க முடியாத தர்க்கங்களுடனும் தனது நோக்கத்தைப் படிப்படியாக விளக்கினார். எதிர்காலத்தை முன்கூட்டியே கணித்துச் செயற்பட்ட அவர், சித்திரவதை போன்ற மிகக் கொடூரமான குற்றங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிப்பது அரசுத் தரப்பு சட்டத்தரணி அல்லது சட்டமா அதிபரின் கடமை என்று கருதி ஒதுங்கியிருந்து பார்க்க வேண்டியதில்லை என்பதை வாதத்துடன் மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் நடைமுறையிலும் நிரூபித்துக் காட்டினார்.

அத்தகைய குற்றங்களைத் தடுப்பதில் சிவில் சமூகத்தினருக்கும் மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கும் பொறுப்பும் பிறரால் பறிக்க முடியாத உரிமையும் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதனை நீதிமன்ற வளாகங்களிலும் நிரூபித்துக் காட்டினார்.

தனிமைப்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக நின்றவர்

அரச அதிகாரத்தைக் கொண்ட பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரால் சித்திரவதைக்கு உள்ளாகிப் பாதிக்கப்பட்ட பலர், அதற்கு எதிராகக் குரல் எழுப்புவதில்லை. அதற்குக் காரணம் சட்டம் மற்றும் தமக்குரிய உரிமைகள் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாமை மட்டுமல்ல; அத்தகைய சூழ்நிலைகளில் தலையிடும் வெளித்தரப்பினரின் செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகளும் நம்பிக்கையின் எல்லைகளும்கூட காரணங்களாக உள்ளன என்று சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ அடிக்கடி கூறிவந்தார்.

எனவே,சட்டத்தைநடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், நீதி கிடைக்கும் வரை தம்மைப் பாதுகாத்து, அதற்காகத் தமக்கு ஊக்கமளிக்க ஒரு குழுவினர் இருக்கின்றனர் என்ற நம்பிக்கையையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் சட்டக் கட்டமைப்பிலும் அரசுத் தரப்பு சட்டத்தரணி பணிகளிலும் காணப்படும் குறைபாடுகள் மற்றும் அலட்சியம் காரணமாகக் கைவிடப்படும் வழக்குகள் தொடர்பாகக் கடுமையான கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். பாதிக்கப்பட்டவருக்கு நீதிமன்றத்தின் மூலம் நீதி கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடாமல் அவரைப் பாதுகாப்பதும், அவருக்கு நம்பிக்கையூட்டி, அதற்காகச் செய்யக்கூடிய அனைத்தையும் செய்வதும் மனித உரிமைப் பாதுகாவலர்களின் முதன்மையான பொறுப்பாகும் என்று அவர் தொடர்ந்து வலியுறுத்தினார். இதற்காக நீதிமன்றச் செயற்பாடுகள் மற்றும் வழக்குத் தொடரல் தொடர்பாகத் தனக்கிருந்த ஆழ்ந்த அறிவைப் பயன்படுத்தினார்.

அந்தக் காலத்தில் பொலிஸ் சித்திரவதைக்கு உள்ளாகி நீதிமன்றத்தின் மூலம் நீதியைப் பெற முடியாமல் இருந்த பலருக்கு, சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ தலைமையிலான ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அதன் கீழ் இலங்கையில் செயற்பட்ட சில அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புகளும் பாதுகாப்பு வழங்கின. இதனைத் தனிநபர் தொடர்பான பிரச்சினையாக மட்டும் கருதாமல், சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய நிறுவனக் கட்டமைப்பில் நிலவிய ஆழமான நெருக்கடியாகவே அவை கருதின.

அண்மைய நாட்களில் பேசப்பட்ட 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பது தொடர்பான சம்பவத் தொடரில் முன்வைக்கப்பட்ட பல விடயங்களைச் சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ பல தசாப்தங்களுக்கு முன்னரே முன்வைத்திருந்தார்.

குறிப்பாக, இன்று உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பேசப்படும் சட்டமா அதிபரின் பங்கு தொடர்பான விவாதத்தை இலங்கையில்

ஆரம்பித்த ஒரு சிலரில் சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ முன்னணியில் இருந்தார்.

சட்டமா அதிபரின் பங்கு இரட்டைத் தன்மையுடனும் பாரபட்சத்துடனும் இருப்பதாக அவர் கேள்வி எழுப்பினார். அரசாங்கத்தின் பிரதான சட்ட ஆலோசகராகவும் “அரசாங்கத்தின் சட்டத்தரணியாகவும்” செயற்படும் சட்டமா அதிபர், அரசாங்கத்துக்கு எதிரான குற்றவியல் வழக்குகளிலும் நீதிமன்றத்தில் முன்னிலையாவது தொடர்பாகவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதன் காரணமாக, சித்திரவதை போன்ற பாரதூரமான மனித உரிமை மீறல் வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய சட்டமா அதிபர், குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகளுக்காக முன்னிலையாவதற்கும் அத்தகைய குற்றங்களை நியாயப்படுத்துவதற்கும் முனைவதை அவர் ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டினார்.

எனவே, இத்தகைய வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் சட்டத்தரணிகளுக்கும் பொதுச் சமூகத்தினருக்கும் தவிர்க்க முடியாத பொறுப்பு இருப்பதாக அவர் தொடர்ந்து வலியுறுத்தினார். இது ஒரு வழக்கு அல்லது முறைப்பாடு தொடர்பான பிரச்சினை மட்டுமல்ல; ஆழமாக வேரூன்றிய நிறுவனமயமான நெருக்கடி என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த அனைத்து விடயங்களின் அடிப்படையில், அந்தக் காலத்தில் அவரது தலையீட்டுடன் நீதியைப் பெற்றுக்கொள்வதற்காகச் சட்டத்துடன் போராடப்பட்ட பாரதூரமான மனித உரிமை

மீறல் சம்பவங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. அவற்றில் பெரும்பாலானவை ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகவும் சிக்கலானவையாகவும் இருந்தன.

சில சம்பவங்களில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அதன் கீழ் செயற்பட்ட இலங்கையின் அரச சார்பற்ற அமைப்புகளும் அவரது தலையீட்டுடன் செயற்பட்டன. வேறு சில சம்பவங்களை சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற அமைப்புகள் நேரடியாக முன்னெடுத்தன. ஆனால், எந்த அமைப்பு சட்டரீதியான தலையீட்டை மேற்கொண்டாலும், ஆலோசனை வழங்குதல், கண்காணித்தல், தொடர்ச்சியாகப் பின்தொடர்தல் மற்றும் வழிநடத்துதல் ஆகியவற்றைச் சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ மேற்கொண்டதே மிகவும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

சில வழக்குகளில் அவர் ஒவ்வொரு கட்டமாகவும் விடயங்களை ஆராய்ந்து, புதிய சட்டக் கோட்பாடுகளையும் வாதங்களையும் உருவாக்கி, அவை தொடர்பாக இலங்கைச் சட்டத்தரணிகளுக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் விசாரணை அதிகாரிகளுக்கும் அறிவூட்டுவதற்காக இரவு பகலாக உழைத்தார்.

இந்தத் தடைகளைக் கடந்து நீதியைத் தேடிய பயணத்தில் உண்மையான மாலுமிகள் பலர் இருந்தபோதிலும், அவர்கள் அனைவருக்கும் வழிகாட்டிய கப்பலின் தலைவராக இருந்தவர் வேறு யாருமல்ல, சட்டத்தரணி பசில் பெர்னாண்டோவே ஆவார். இதனை நான் மட்டுமல்ல, அவருடன் பழகிய பலரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

சித்திரவதையாளர்களுக்கு எதிரான போராட்டம்

அந்தக் காலத்தில் அவரது தலையீட்டின் மூலம் நீதிமன்றச் செயற்பாடுகளுக்குக் கொண்டுசெல்லப்பட்ட பல வழக்குகள் தனித்துவமானவையாக இருந்தன. அவற்றில் சில, அவற்றைத் தீர்ப்பதற்காக எந்தவொரு அரச அல்லது அரச சார்பற்ற அமைப்பும் முன்வரும் என்று குறைந்தபட்ச நம்பிக்கைகூட வைக்க முடியாத அளவுக்குக் கொடூரமான பொலிஸ் அடக்குமுறைச் சம்பவங்களாக இருந்தன.

அந்தக் காலத்தில் சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ தலையீடு செய்ததால் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய வழக்குகளில் ஒன்று, 2002ஆம் ஆண்டு வத்தளை பொலிஸ் அதிகாரிகளால் பொய்யான தகவல்களின் அடிப்படையில் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டு கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தில் பணியாற்றிய ஜெரார்ட் பெரேராவின் வழக்காகும்.

வத்தளை பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று அவரை அழைத்துச் சென்று தடுத்து வைத்ததுடன், திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதாகக் கூறி அவரைக் கடுமையான உடல் சித்திரவதைக்கு உள்ளாக்கியது. அந்தத் தாக்குதல்களால் அவரது உட்புற உறுப்புகள், குறிப்பாக சிறுநீரகங்கள் செயலிழந்தன. அவர் மயக்கமடைந்து, மரணத்தின் விளிம்புக்குச் சென்றார்.

அடுத்த வாரம் மிகுதி தொடரும்....

இறுதி மூச்சுவரை வீரசைவக் குருவாக வாழ்ந்து உயிர் நித்த வ.சோதிலிங்கம் குருக்கள்

கடந்த வாரத் தொடர்ச்சி....

சின்னத்தம்பி குருபரன்

வீரசைவர், சங்கமர் ஆகிய இருவருமே தங்கள் உடல் மீது இட்டலிங்கம் அணிவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். சிவனே முழுமுதற் கடவுள் என்ற கோட்பாடும், இலிங்க வழிபாடும் இருவருக்கும் பொதுவானவை. இரு மரபுகளிலும் மும்மூர்த்திகளாகக் கருதப்படும் குரு, இலிங்கம், சங்கமம் ஆகிய கோட்பாடுகளை மையமாகக் கொண்டவை. இதில் சங்கமர் ஆன்மீக வழிகாட்டிகளாகவும் சமூகத்தை நெறிப்படுத்துபவர்களாகவும் விளங்குகிறார்கள். காலப்போக்கில் வீரசைவ மரபும் பசவண்ணரின் பக்தி இயக்கமும் ஒன்றுக்கொன்று கலந்துவிட்டன. பல சந்தர்ப்பங்களில் 'வீரசைவர்', 'இலிங்காயத்து' என்ற சொற்கள் ஒரே பொருளில் அல்லது ஒரே சமூகத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

வீரசைவம் வேதங்கள், ஆகமங்களுடன் பாரம்பரிய சைவ சித்தாந்தங்களை முழுமையாக ஏற்றுக்கொள்கிறது. இது பிராமணிய அல்லது ஆகம மரபிற்கு நெருக்கமானது. சங்கமர்கள் பசவண்ணர் மற்றும் சரணர்களால் அருளப்பட்ட வசன இலக்கியத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளனர். வேதங்களை விட மனிதநேயம், சமத்துவம், மற்றும் பகுத்தறிவுக் கருத்துகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர்.

பசவண்ணர் சாதி அமைப்பையும், தீண்டாமையையும், மூடநம்பிக்கைகளையும் கடுமையாக எதிர்த்தார். இலிங்காயத்து இயக்கம் சாதி மறுப்பு இயக்கமாகவே தோற்றம்பெற்று வளர்ந்தது. ஆனால், மரபுவழி வீரசைவத்தில் சில சாதியக் கட்டமைப்புகளும் ஆகம நெறிமுறைகளும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. வீரசைவர்கள் ஆகம விதிமுறைப்படி தீட்சை பெறுபவர்களாகவும், இலிங்காயத்துகள் குரு மூலமாக இட்டலிங்க தீட்சை பெற்றுச் சமத்துவமாக வாழ்பவர்களாகவும்

பார்க்கப்படுகின்றனர்.

வீரசைவரும் சங்கமர்களும் சிவதத்துவத்தைப் பின்பற்றுவதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போன்றவர்கள். வரலாற்று ரீதியாக இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. இருப்பினும், நவீன காலத்தில் தத்துவார்த்த அடிப்படையில் சங்கமர்கள் தங்களைத் தனித்துவமான சுயாதீனமானதொரு ஆன்மீக மரபாகவும், வீரசைவர்களைச் சைவ சித்தாந்தத்தின் ஒரு பிரிவாகவும் அடையாளப்படுத்துவர்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் வீரசைவ நெறியைப் பின்பற்றியோர் வந்தாறுமூலையிலும் சங்கமர்கள் தம்பட்டை, திருக்கோயில், தம்பிலுவில், கோமாரி, பனங்காடு, அக்கரைப்பற்று, களுவாஞ்சிக்குடி போன்ற இடங்களிலும் வசித்து வந்தனர். இவர்கள் தங்களைச் சங்கமர்கள் என்றே அழைத்து வருகின்றனர். இவர்களில் பலர் பிற தொழில்கள் காரணமாக இக்கருமங்களில் இருந்து விலகிச் சென்றுவிட்டனர். இப்பிரதேங்களில் முன்பிருந்த சங்கமர்களும், தற்போதுள்ள ஒருசிலரும் பூநூலை மாத்திரமே அணிந்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

5. இலிங்கதாரி என்படுபவர்.

இலிங்கதாரி' என்றால் “இலிங்கத்தை மார்பில் அணிந்து கொண்டவர்” என்று பொருள்படும். வீரசைவ நெறியைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் எப்போதும் தங்களின் உடலில் குருவினால் வழங்கப்பட்ட இட்டலிங்கத்தை (சிறிய சிவலிங்கம்) ஒரு நுலில் அல்லது கயிற்றில் கட்டிக் கழுத்திலோ அல்லது உடலிலோ பாதுகாப்பாக அணிந்திருப்பார்கள். இவர்கள் தான் ‘இலிங்கதாரிகள்' என அழைக்கப்படுகிறார்கள். இலிங்கத்தை அணியாதவர்கள் வீரசைவர்களாக இருக்க முடியாது. இலிங்காயதக் கோட்பாட்டின்படி, உடலே ஒரு கோவில், அந்த உடலுக்குள் ஆன்மா வசிப்பது போல, அந்த ஆன்மாவுடன் இணைந்தே இட்டலிங்கம் எப்போதும் உன்னதப் பாதுகாப்புடன் உடலில் தொங்கிக் கொண்டிருக்கும்.

வீரசைவ நெறியில் இணைவதற்குப் பரம்பரை, பிறப்பு, வகுத்துவார், பாகை, சாதி என்பதெல்லாம் முக்கியமல்ல. யாரும் இணைந்து கொள்ளலாம்.

மாறாக முறையான தீட்சை பெறுவதே முக்கியமானது. ஒருவர் வீரசைவ நெறியை ஏற்க விரும்பினால், அவர் முறையான குருவிடம் அல்லது மடாதிபதியிடம் அல்லது இலிங்கதாரியிடம் சென்று ‘இட்டலிங்க தீட்சை' பெற வேண்டும். குருவானவர் அந்த நபருக்கு சிவபூஜையின் தத்துவங்களை விளக்கி, மந்திரோபதேசம் செய்து, வெள்ளி அல்லது பாசாணத்தால் செய்யப்பட்ட சிறிய ‘இட்டலிங்கத்தை' முறைப்படி வழங்குவார். அன்றிலிருந்து அந்த நபர் தீவிரமான சிவதொண்டராகவும், சைவ நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பவராகவும் சைவ உணவு முறை, எளிமையான வாழ்க்கை, சமத்துவ சிந்தனை ஆகியவற்றைக் கடைப்பிடித்து ஒழுகும் வீரசைவராகக் கருதப்படுவார். இவரின் கழுத்தில் மாலையில் தொங்கவிடப்பட்டிருக்கும் இட்டலிங்கத்துக்கு அதிகாலை பிரம்ம முகூர்த்த வேளையில் எழுந்து காலைக் கடன்கள் முடித்து நீராடிப் பூசை செய்வார். அதன் பின்னரே ஏனைய கடமைகளில் ஈடுபடுவார். இலிங்கதாரி ஒருவர் தினமும் ஒரு தடவையாவது தவறாது இலிங்க பூசை செய்வது கடமையாகும்.

6. வீராகமம்.

வீராகமம் என்பது வீரசைவ நெறியின் மிக

முக்கியமான, அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கும் ஆகம நூலாகும். இது சிவபெருமானின் உறைவிடமாகவும், சித்தாந்தங்களின் தொகுப்பாகவும் கருதப்படுகின்றது. இருபத்தெட்டு சிவாகமங்களில் இது ஒன்றாகும்.

வீராகமம் சிவபெருமானின் திருவாயிலிருந்து வெளிப்பட்டதாக நம்பப்படும் ஆன்மீக மற்றும் தத்துவ நூலாகும். இது பக்தி, ஞானம், கிரியை (வழிபாட்டு முறைகள்) மற்றும் யோகம் ஆகியவற்றை உள்ளடக்கியது. குறிப்பாக, இலிங்காயத்து அல்லது வீரசைவ சம்பிரதாயத்தின் ஆன்மீக வழிமுறைகளுக்கும், சமூக நெறிமுறைகளுக்கும் இதுவே மூலவேராக அமைகிறது உடலின் மீது இலிங்கம் அணிவது, (இலிங்க தாரணம்) அதன் ஆன்மீகப் பொருளான சிவசம்பந்தத்தை இது ஆழமாக விளக்குகிறது.

சாதி பேதங்களையும், பிறப்பு அடிப்படையிலான உயர்வு தாழ்வுகளையும் மறுத்து, சிவ பக்தியே பிரதானம் என்ற சமத்துவக் கொள்கைக்கு ஆகம அடிப்படையில் வலுச் சேர்க்கிறது. பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு வீரசைவரின் வாழ்க்கையில் செய்யப்பட வேண்டிய வழிபாட்டுச் சடங்குகளுக்கான நெறிமுறைகளை வகுத்துக் கூறுகிறது.

வீரசைவர்கள் தங்கள் தினசரி சிவபூசையில் (இலிங்க பூசை) வீராகமத்தின் விதிமுறைகளைப் பின்பற்றி வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். பூசையைத் தொடங்குவதற்கு முன் குருவையும், தமது கையில் அல்லது உடலின் மீது தாங்கியுள்ள 'இட்டலிங்கத்தையும்' வழிபடுவதற்கான முறைகள் வீராகமத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சிவபூஜையின் போது அனுசரிக்கப்படும் பிராணப்பிரதிஷ்டை, சோடசோபசார வழிபாடு (பதினாறு உபசாரங்கள்) மற்றும் சிவ பஞ்சாட்சர மந்திர உச்சாடன முறைகள் இந்த ஆகமத்தின் வழிநடத்துதலின்படியே செய்யப்படுகின்றன. பூசை செய்யும் இடத்தின் தூய்மை, மன ஒருமைப்பாடு மற்றும் பக்திப் பெருக்குடன் செய்யப்படும் கிரியைகள் அனைத்தும் வீராகமத்தின் விதிமுறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

சைவ சமயத்தவர்கள் சிவபெருமானால் அருளப்பட்ட 28 சிவ ஆகமங்களையும் மூல நூல்களாகக் கருதுகின்றன. இந்த 28 ஆகமங்களில் பொதுவான சைவ தத்துவங்கள் முதல் பகுதியிலும், அதனை விடவும் சிறப்பான வீரசைவத்திற்கே உரிய பிரத்தியேக தத்துவங்கள், வழிபாட்டு முறைகள் ஆகமங்களின் இறுதிப் பகுதிகளிலும் (Agamanta) விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இதனாலேயே வீரசைவ நெறியை 'ஆகமாந்தம்' என்றும் அழைக்கின்றனர்.

சிவலிங்கத்தை (சிவபெருமானை) வழிபடும் முறைகள், கிரியைகள், பூசை முறைகள், ஆலய அமைப்பு முறைகள், யோக முறைகள், பிரபஞ்சத்தின் இயல்பு நிலை போன்றவற்றை ஆகமங்கள் விரிவாக விளக்குகின்றன. வீரசைவத்தின் தத்துவப் பின்னணியான 'சக்தி விசிட்டாத்துவைதக்' கோட்பாட்டின் வேர்கள் இந்த ஆகம நெறிகளிலிருந்து பெறப்பட்டவையாகும். வேத காலச் சடங்குகளைப் போலன்றி, ஆகம முறைகள் சாதி, மத பேதமின்றி அனைவரையும் ஆன்மீகத்தில்

அனுமதிக்கக்கூடிய வகையில் தாராளமான விதிகளையும் யோக மார்க்கங்களையும் கொண்டுள்ளன. வீரசைவர்கள் தங்களின் அன்றாட ஆச்சார விதிமுறைகளுக்கும், இட்டலிங்க வழிபாட்டு முறைகளுக்கும் இந்த ஆகமங்களின் வழிமுறைகளையே பிரதான வழிகாட்டியாகக் கொள்கின்றனர்.

இந்த அடிப்படையில் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீச்சரர் ஆலயத்தில் பல நூற்றாண்டுகளாக வீராகம முறைப்படியே பூசைகள், கிரியைகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. 1917 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நியமனம் பெற்ற களுவாஞ்சிக்குடி சங்கமக் குருக்களான சிவஸ்ரீ சின்னத்தம்பிக் குருக்கள் உட்பட அதற்குப் பின்னர் நியமனம் பெற்ற வீரசைவக் குருமாரும் வீராகம முறைப்படி பூசைகள், கிரியைகள் செய்வதைத் தவிர்த்து வந்தனர். இந்நடைமுறை இன்றுவரை தொடர்கிறது.

சிவஸ்ரீ வ. சோதிலிங்கம் குருக்கள் இவ்வாலயத்தில் வீராகம முறைப்படி பூசைசெய்யாவிட்டாலும் எண்ணம், சொல், செயல்களால் வீரசைவனாகவே வாழ்ந்தவர். உடல், மனக் கட்டுப்பாடுகளோடு இறுதிவரைப் பிரமச்சாரியாகவே வாழ்ந்தவர். அவர் உணவு உண்ணும்போது யாராவது ஆலயத்தில் போசனமின்றி இருந்தால் அவர்களுக்கும் கொடுத்து தான் உண்ணும் வழக்கத்தை இறுதிவரைக் கடைப்பிடிதவர். இத்தனை பண்புகள் நிறைந்த சோதி ஐயாவின் இழப்பு பேரழப்பாகும். ஆலயத்தில் அவரின் வீரசைவப்பணி தொடர வேண்டும். அதற்கு அப்பிரதேச மக்கள் விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும். இப்போக்கு நீடித்தால் காலப்போக்கில் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார், அமிர்தகழி மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் என மாற்றம் பெற்றதுபோல் கொக்கட்டிச்சேலை ஸ்ரீ தான்தோன்றிச்சரர் ஆலயமும் சுயம்புலிங்கப் பிள்ளையாராக மாறலாம்.



STEDO
சுவிஸ் தமிழ் பொருளாதார மேம்பாட்டு அமைப்பு
தொழில்முனைவோரின் சங்கமம்
தடம்
வணிகத் துறையில் புதிய தடம் பதிக்கும் நமது
தமிழ் தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள் மற்றும் சாதனையாளர்களை
ஒன்றிணைக்கும் ஒரு பிரம்மாண்டமான மாலைப் பொழுது!
தொழில் தொடர்பு
தொழில் அதிபர்களுடன் சந்திப்பு
புதிய தொழில் வாய்ப்புகள்
முன்னேற்றம்
புதிய யோசனைகள்
புதிய வாய்ப்புகள்
உடை
அழகான வணிக உடை
அழகான பாரம்பரிய உடை
இரவு உணவு
சிறப்பு உணவு
இனிய சந்திப்பு
Date
13.12.2026
(Sunday)
Time
14:30-18:00
18:00-21:00 Networking
Venue
STERNENSAAL
BÜMPLIZSTRASSE 119
3018 BERN
079 218 70 75 | 079 780 10 00 | 079 443 44 94 www.stedo.ch

சைவத் தமிழ்ச் சங்கம்
அருள்மிகு சிவன் கோவில்
32 வது ஆண்டு
கலைவாணி விழா
காலம்
25.10.2026
ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிக்கு
இடம்
அருள்மிகு சிவன் கோவில்
அமிர்தம் நல்நிகழ்வு மண்டபம்
Industriestrasse 34
8152 Glattburgg, Switzerland
044 371 02 42, 078 819 31 09
நிகழ்வுகள்
முத்தேவியர் வழிபாடு
மாணவர்களுக்கான போட்டிகள்
கலைநிகழ்ச்சிகள்
பரிசளிப்பு
அறிவு
அன்பு
அறம்
ஆய்வு
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
சைவத் தமிழ்ச் சங்கம்
இளம் தொண்டர் சபை
044 371 02 42 | 078 819 31 09

பைந்தமிழ்ச் செம்மல்

நிர்மலா சிவராசசிங்கம் அவர்களின்

சிலேடைச் செல்வம், பொன்வண்ணம்





ஆகிய இரு

கவிதை நூல்கள் அறிமுக விழா

காலம் – 01.11.2026 ஞாயிறு | பி.ப. 3:00 மணி

இடம் – Fronwaldstrasse 94, 8046 Zürich

நிகழ்ச்சி நிரல்

1. மங்கல விளக்கேற்றல்
2. அக வணக்கம்
3. வரவேற்புரை – சுருதிப் பிரியர்கள் இசைக்கலைஞர் சிவபாலன் பாலசண்முகம்
4. ஆசியுரை – சோதிடர் எழுத்தாளர் திரு. சுதாகர் பரமேஸ்வரன்
5. தலைமையுரை – கவிஞர் சிவச்செல்வம் செல்லத்தம்பி
6. வெளியீட்டுரை – கணேசலிங்கம் கணபதிப்பிள்ளை (கவிஞர், எழுத்தாளர்)
7. வாழ்த்துரை – கவிஞர் செல்வயோகநாதன் வேலுப்பிள்ளை
8. நூல்கள் வெளியீடு
9. நூல் நயவுரைகள்
   - பொன்வண்ணம் : முத்தமிழ்செல்வன் சிவஸ்ரீ நா.கஜேந்திரக் குருக்கள்
   - சிலேடைச் செல்வம் : முனைவர் கங்கைமகன் (எழுத்தாளர், கவிஞர்)
10. ஏற்புரையும் நன்றியுரையும் – நூலாசிரியர்

இவ் விழாவைச் சிறப்பிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்!

தொடர்புகளுக்கு 076 581 83 32 / 078 949 28 90
078 649 92 80 / 076 583 41 31